[library stamp]

# சென்னை வியாபாரி

என்கிற

# தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | பிரமாதீச ௵ புரட்டாசி௴ 8௳— 1913௵ செப்டம்பர்௴ 23௳ | ஸஞ்சிகை 5. No. 5.

## "சென்னை வியாபாரி."

(மாதப் பிரசுரம்.)

"சென்னை வியாபாரிக்கு கடிதம் எழுது கிறவர்களும் மணிஆர்டர் அனுப்புகிறவர்களும் சென்னபட்டணம் நார்த்பீச் இந்தியன் சேம்பர் பில்டிங்கிலிருக்கும் மானேஜருக்கு எழுதவேண்டும்.

விளம்பரங்கள் பயிரங்கப்படுத்துவதற்காக பிளாக்குகளும் அது சம்பந்தமான கடிதங்க ளும் மானேஜருக்கே அனுப்பப்படவேண்டும். **விளம்பரவிகிதம்:**—முழுப்பக்கத்திற்கு ஒரு மா தத்திற்கு ரூ 5; பாதி பக்கத்திற்கு ரூ 3; கால் பக்கத்திற்கு ரூ 2-0-0. ஒப்பந்த விகிதங்க ளுக்கு பிரத்தியேகமாக எழுதிக் கொள்ளலாம்.

### சென்னை வியாபாரியின் சந்தாவிபரம்.

இந்தியா—சிலோன் பர்மாமுதலிய

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாட்டு தபால்சார்ஜ் உள்பட | ரூ. | 5 | 0 | 0 |
| சிங்கப்பூர் பினங் ,, | ரூ. | 7 | 8 | 0 |
| தனிப்பிரதி 1க்கு ,, | ரூ. | 0 | 6 | 0 |

வியாபார சம்பந்தமாகவும் கைத்தொழில்சம் பந்தமாகவுமுள்ள வியாசங்கள் அங்கிகரிக்கப் பட்டால், வியாசம் எழுதியவர்கள் வெகு மானிக்கப்படுவார்கள்.

## Southern India Chamber of Commerce.

### தென்னிந்தியா வர்த்தக ஆலோசனை சபை.

பிரெஸிடெண்ட்.

ருவ்பகதூர் பி. தியாகராய செட்டி பி. ஏ.

வைஸ் பிரசிடெண்டுகள்.

1. கான்பகதூர் M. A. கூடூஸ்பாட்சா சாகேப்.
2. திவான்பகதூர் கோவிந்ததாஸ் சதுர்புஜ தாஸ்.

கௌரவ காரியதரிசிகள்.

1. மிஸ்டர் P. N. முத்துசாமி நாயுடு பி. ஏ.
2. மிஸ்டர் மவுலானா அப்துஸ் சுப்ஹான் சாகேப்.

பிரசிடெண்டையும் வைஸ் பிரசிடெண்டு களையும் தவிர கமிட்டியில் 24 மெம்பர்களிருக் கிறார்கள். இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மீட்டிங்கு நடத்தப்படுகிறது.

சந்தா.—வருஷத்திற்கு ரூ 24; உள்ளூரில் வசிப்பவர்கள் ½ வருஷத்திற்கு ஒரு வாய்தா வாக முன்பணமாகச் செலுத்தவேண்டும். வெளியூர் மெம்பர்களுக்கு ரூ 10. இருவகை யாருக்கும் பிரவேசக்கட்டணம் ரூ 12.

இந்த வர்த்தக ஆலோசனைசபை கம் பெனி ஆக்ட்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட் டிருக்கிறது.

Trade Marks என்கிற வியாபார சாமான் அடையாளம், ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டு மானால் மெம்பராக இருப்பவர்களுக்கு ரூ. 3ம். மெம்பராயில்லாதவர்களுக்கு ரூ. 8ம்ஏற்பட்டிரு க்கிறது. வர்த்தக அடையாளங்கள் அடங்கிய ரிஜிஸ்டரை பார்க்க விரும்புகிறவர்கள் ரூபாய் ஒன்று செலுத்த வேண்டும்.

பார்வையிடுவதும் பஞ்சாயத்தும்:—தகரா ருக்குட்பட்ட சமான்களைப் பார்வையிட்டு மத்தியஸ்தம் செய்யவும் சேம்பர் உடன்படுகி றது.

ஆபீஸ்:— சென்னை நார்த்பீச் இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ்.

## IMPORT OF FIRE WORKS.
## பாணச்சரக்குகளின் இறக்குமதி.

சென்னைத் துறைமுகத்திலிருக்கும் Port Combustible Shed என்று சொல்லும்படியான தீ பிடிக்கக்கூடிய கொட்டகையில் பாணச் சரக்குகள் சேர்த்துவைக்கப் படுவதை கவர்ன் மெண்டார் தடுத்துவிட்டார்கள். ஆகையால் போர்ட்டிரஸ்ட்டாரும் வர்த்தகர்கள் தரப்பில் தென்னிந்தியாச் சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக சங்கத்தார்களும் பாணச்சரக்குகளுக் காக பிரத்தியேகமான கொட்டகை போடப் படும் பரியந்தரம் இந்தவருஷத்திற்கு ஷை தீப் பிடிக்கக்கூடாத கொட்டகையை உபயோகப் படுத்திக்கொண்டு வரும்படி அனுமதி கொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை வேண் டிக் கொண்டார்கள். இவர்களுடைய பிரார்த் தனை எல்லாம் பயன் பெறாமல் போகவே அடு த்த மாதம் வரப்போகிற தீபாவளி விற்பனைக் காக பாண சாமான்களுக்கு முந்தியே உத்தி ரவு அனுப்பிய வர்த்தகர்கள் தாங்கள் கொடுத்திருந்த உத்திரவுகளை ரத்து செய் யும்படியாக நேரிட்டுவிட்டது. இந்த நிலைமையி லிருக்கும் வர்த்தகர்கள் தங்களுக்கு இச்சமயம் உதவிபுரிய வேண்டுமென்று போர்ட் டிரஸ்ட் அதிகாரிகளை வேண்டிக்கொண்டார் கள். ஆகவே போர்ட்டிரஸ்ட்டிற்குச் சேர்மே னாகவிருக்கும் சர் பிரான்சிஸ் ஸ்பிரிங் என்பவ ரால் பயிரங்கப்படுத்தப்பட்ட அடியிற்கண்ட விளம்பரம் வர்த்தகர்களுக்கு சந்தோஷத்தை யும் திருப்த்தியையும் கொடுத்தது:—"கொரு க்குப் பேட்டையிலிருக்கும் சர்க்காருக்குச் சொந்தமல்லாத ஒரு பாணமருந்து கிட்டங்கி யை கவர்ன்மெண்டார் தற்கால உபயோகத் திற்காக மூன்று மாதகாலத்திற்கு குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறபடியால் அடுத்த மூன்று மாதங்களில் சென்னைத் துறைமுகத் தில் இறக்குமதி செய்யப்படக்கூடிய பாணச் சரக்குகள் அம்மருந்துகிடங்குகளில் சேர்த்து வைக்கப்படலாமென்றும் அப்படி அவ்விடத்தில் சேர்த்துவைப்பதற்கு என்னென்ன நிபந்தனைக ளுண்டோ அவைகளை டிராபிக் மானேஜருக்கு மனுக்கொடுத்து அறிந்துகொள்ள வேண்டு மென்றும் பாணச்சரக்கு இறக்குமதிக்காரர்கள் அறிவிக்கப்படுகிறார்கள்." இந்தக் கடைசி சம யத்தில், இந்த கிடங்கை வாடகைக்கு அமர்த்துவதற்குக் கூட கவர்ன்மெண்டார் அனுமதி கொடுக்க இணங்கவில்லை! ஆகவே வர்த்தகர்கள் நஷ்ட மடையும்படியான துர்ப் பாக்கியமான நிலைமையிலிருக்கிறார்கள்.

——:(*):——

## HOW INDIAN TEA IS SOLD.
## இந்தியன் தேயிலை எப்படி விற்பனை செய்யப்படுகிறது.

இந்தியன் தேயிலை செஸ் கமிட்டியார் கடந்த மார்ச்சு மாசத்துடன் முடிவாகும் வருஷத்திற் கு பயிரங்கப் படுத்திருக்கும் விபரக் கணக்கு இந்தியா கவர்ன்மெண்டு கெஜெட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. இந்தியன் தேயிலை ஏற்றுமதியின்பேரில் ஒரு பவுண்டிற்கு கால்பை வீதம் செஸ்வரிவசூல் செய்யப்பட்டுவருகிறது. இந்த வசூல் மூலியமாக இவ்வருஷத்தில் 3·63 லக்ஷம் ரூபாய் சேர்ந்தது. செலவுபோக 1·27 லக்ஷம் மீர்ந்தது; செய்யப்பட்ட செலவு களுக்குள் அடியிற்கண்டவை கவனிக்கப்பட வேண்டியதாயிருப்பதால் அவைகளை இவ்வி டத்தில் எடுத்து எழுதுகின்றோம். முதலில் ஆபீசு செலவிற்காகவும் சம்பளம் பட்வாடா விற்காகவும் மாதம் ரூ. 500 வீதம் கொடுக்கப் படிருக்கிறது. இந்தியாவில் தேயிலை விற்பனை யை விருத்திப்படுத்தவும் அதிகப்படியாய் செலவழியும்படியாக முயற்சிகள் செய்வதற்கா கவும் கேவலம் ரூ. 200 தான் செலவு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் அதே காரியங்களுக்

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 9 OCT 1913 MADRAS

காக அன்னிய தேசங்களில் செய்யப்பட்டிருக்கும் செலவு மிகவும் அதிகமாயிருக்கிறது. வட அமெரிக்காவில் செய்யப்பட்ட விளம்பரங்களுக்காக 1.47 லக்ஷ ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பா கண்டத்தில் செய்யப்பட்ட விளம்பரங்களுக்காக லக்ஷ ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. லண்டனிலிருக்கும் இந்தியன் தேயிலை சங்க காரியதரிசி விளம்பரங்களுக்காக ரூ. 35 ஆயிரம் செலவு செய்திருக்கிறார். யுனைட்டெட் கிங்டம் விளம்பரங்களுக்காக ரூ. 60 ஆயிரத்திற்கு மேலாகச் செலவு செய்யப்பட்டுவருகிறது. தென் ஆபிரிக்கா கணக்குடன் மொத்தச் செலவு ரூ. 3 48 லக்ஷம். ஆகவே பாக்கி ரூ. 1·28 லக்ஷம்.

## FACTORIES IN THE MADRAS PRESIDENCY.

## சென்னை ராஜதானியின் தொழிற் சாலைகள்.

சென்னை ராஜதானியி லிருக்கும்படியான தொழிற்சாலைகளின் இன்ஸ்பெக்டரால் 1912 வருஷத்திற்கு வெளியிடப்பட்டிருக்கும் ரிப்போர்ட் இப்போது பிரசுரப் படுத்தப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளின் ஆக்ட் அமுலுக்குக் கொண்டுவரப்படுவதற்கு முந்தி 208 தொழிற் சாலைகள்தா னிருந்தன. இப்போது 268 யிருக்கின்றன. இந்த அதிகப்படியான எண்ணிக்கைக்கு காரணம் என்னவென்றால் அரிசி ஆலைகளும், பஞ்சு ஆலைகளும், ஓட்டு ஆலைகளும் புதிதாயும் எதேஷ்டமாயும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த இராஜதானியில் இப்போது 1907ம் வருஷத்திலிருந்ததைவிட இரண்டு மடங்கு அதிகமான தொழிற்சாலைகளிருக்கின்றன. கடந்த மூன்று வருஷங்களுக்கு முந்தி 46,151 வேலைக்காரர்கள்தா னிருந்தார்கள். இப்போது 65,191 வேலைக்காரர்களிருக்கிறார்கள். பொதுவாய்ப்பேசின் தொழிற் சாலைகளைப் பார்க்கிலும் கிராமாந்தரங்களில் கூலி அதிகமாகக் கிடைக்கிறதென்று இப்போது இன்ஸ்பெக்ட்டர் ரிப்போர்ட்செய்கிறார். பின்னல் நெசவுத் தொழிற்சாலைகளில் கொல்லர்களையும் வார்ப்பட வேலைக்காரர்களையும் தவிர மற்றப்படி தேர்ந்த வேலைக்காரர்களும் சமானிய வேலைக்காரர்களும் கிராமந்திரங்களில் கிடைக்கக்கூடிய கூலிகளைப் பார்க்கிலும் தாழ்ந்த கூலி வாங்கிக்கொண்டு வருகிறதாக ரிப்போர்ட் செய்யப்படுகிறது. அதேமாதிரியாக அரிசி ஆலைகளில் கொத்தர்களையும் தச்சர்களையும் தவிர மற்ற எல்லா வேலைக்காரர்களும் கிராமாந்திரங்களில் தாழ்ந்த கூலிதான்வாங்கிருகிறார்கள். பஞ்சு கொட்டை எடுக்கிற தொழிற் சாலைகளில் எல்லாவகைவேலைக்காரர்களுக்கும் உயர்ந்த கூலி கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் இன்ஜின் டிரைவர்களுக்கு மட்டிலும் 8 அணா குறைவாகக் கொடுத்து வரப்படுகிறது. இனி இன்ஸ்பெக்ட்டர்கள் ரிப்போர்ட்டுகளில் தொழிற்சாலை யிருக்கும்படியான முக்கியமான வேலைக்காரர்கள் சராசரிக் கூலி எவ்வளவு சம்பாதிக்கிறார்கள் என்றும் தொழிற் சாலைகளுக்கு வெளியிலிருக்கும் அவ்வகையார் என்ன சம்பாதிக்கிறார்கள் என்றும் அன்னோர்களுடைய நிலைமை எப்படி யிருக்கிறதென்றும் எழுதினால் போதுமான தென்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்கள். தேர்ந்த வேலைக்காரனுக்கு தொழிற்சாலையில் கிடைக்கும் கூலிக்கும் சாலைக்கு வெளியில் கிடைக்கும் கூலிக்கும் அதிக வித்தியாச மிருக்கமாட்டாது. ஆதலால் தொழிற் சாலைகளில் சாமானிய வேலைக்காரர்கள் என்ன சம்பளம் வாங்குகிறார்கள் என்றும் அவர்களுடைய நிலைமை எப்படி யிருக்கிற தென்றும், இத் தொழிற்சாலைகளுக்கு விவசாயக் கூலிக்காரர்கள் வருகிறார்களோ வென்றும் அறிந்து கொள்ள கவர்ன்மெண்டார் விரும்புகிறதாகத் தெரிகிறது.

# MADRAS MARKET REPORTS.
# சென்னை மார்க்கட் ரிப்போர்ட்.

——(:o:)——

## Piecegoods.
### சீமை ஜவுளி.

1913 செப்டம்பர்ம் 8உ

உள்ளபடியே வியாபாரத்தில் சுறுசுறுப்பைக் காணோம். ஆனால் அடிக்கடி சொற்ப விசாரணைகளிருக்கின்றன. பொதுவாய் விற்பனைகள் முன்னுக்கிப்போது மிகவும் உபாயமாக விருக்கின்றன. எல்லா தினுசுகளிலும் பேரம் இன்னும் பலவீனமாகவே யிருக்கிறது. இனி மார்க்கட் நன்றாயிருக்குமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. உள்ளூர் மார்க்கட்டில் தீபாவளியை எதிர்பார்த்து விலைகள் உபாயமாய் ஏறியிருக்கின்றன. சீமை விலைகளும் உபாயமாய் ஏறி நிற்கின்றன.

## Grey Shirtings.
### கோரா காடா.

உயர்ந்த ரகங்களுக்கு கிராக்கி அதிகமாயிருக்கிறது. மட்ட ரகங்களுடையவும் நடுத்தர ரகங்களுடைய விலைகள் இறங்காமல் உறுதியாய் நிற்கின்றன. விற்பனைகள் மிதமாய் நடந்துகொண்டு வருகின்றன.

## Grey Jaconets.
### கோரா ஜாக்நட்டுகள்.

முந்திய மாத ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டதுபோல தொடர்ந் தேர்த்தியாக மந்தமாயிருந்து கொண்டிருக்கிறது.

## Grey Mulls.
### கோரா மல்லுகள்.

வியாபாரம் குறைந்து கொண்டு வருகிறதென்று வெளிப்படையாய் தெரியவருகிறது. கையிருப்பு சேர்ந்துகொண்டு வருகின்றது. உள்ளூரில் விலைகள் இறங்கியிருக்கின்றன. மார்க்கட் இறங்கு முகமாக யிருக்கிறதென்று தெரிகிறது.

## Grey-Dhoties.
### கோரா தோவத்திகள்.

மல், ஜாக்கட் ரகங்களுக்கு அங்குமிங்கும் சொற்ப விசாரணைகள் நடந்து வருகின்றன. தீபாவளியில் நல்ல பேரங்கள் நடக்குமென்று எதிர்பார்க்கப் படுகின்றன. ஷர்ட்டிங் ரகத்திற்கு டிமாண்டு கேவலமாயிருக்கிறது.

## White Mulls.
### சலவை மல்லுகள்.

இந்த ரக சம்பந்தமாக மார்க்கட் மந்தமாயிருக்கிறது. 1902—ரூ. 6-12-0; 1703, ரூபா 7-14.0 ஆகவும் கிரையமாகி வருகின்றன. கையிருப்பு முழுதிலும் கரைந்துபோய் விட்டது. அவைகளுக்குச் சமமான ரகங்களும் உயர்ந்த ரகங்களும் மிதமாய் விற்பனையாகி வருகின்றன. 8 அணா முதல் 10 அணா வரையில் சம்மியாய் விலை யாகின்றன. நடுத்தர ரகங்களுக்கும் நாசூக்கான ரகங்களுக்கும் விசாரணை அற்பம்; கையிருப்பு கனம்.

11"/42" × 20 கெஜங்கள் கனத்த மல்லிற்கு கிராக்கியில்லை. கையிருப்பு மிதம்

வெள்ளை கேம்பிரிக் வெள்ளை நேயின்சூக்— விசாரணை இன்னும் சுறுசுறுப்பாயில்லை.

## Prints.
### சீட்டிகள்.

விலைகள் உறுதியாய் நிற்கின்றன. நல்ல கிராக்கி எதிர்பார்க்கப்படுகிறது. கூடிய வரையில் நல்ல ரிப்போர்ட்டுகள் வந்துகொண் டிருக்கின்றன. சீமையில் என்கிரேவர்களுடைய கட்டுப்பாடு பைசலாகிவிட்டன. சரக்கை இன்னும் தாமதமாக அனுப்புவதாக சீமை ஏஜண்டுகள் எழுதுகிறதில்லை.

## Sarries.
### சேலைகள்.

சிகப்பு, ஊதா ரகங்கள் உபாயமாக விலையாகி வருகின்றன.

## Twist and yarn.

### நூல்.

8—9—1913.

மார்க்கட்டில் கையிருப்பு தினம் தினமும் குறைந்து கொண்டு வருகின்றது. கனத்த சரக்குகள் வரவு. சீமை மார்க்கட் பலம். வர்ண நூல்கள் ரொம்பகாலம் சென்று அனுப்பப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. இன்டெண்டுகள் தாராளமாயில்லை. வியாபாரிகள் பயந்து தாமதிக்கிறார்கள். கோரா நூல்களின் விலை நயமாயிருக்கிறது.

## Cotton.

### பஞ்சு.

மார்க்கட் உறுதியாயும் அமரிக்கையாயு மிருக்கிறது. அமெரிக்கா பஞ்சின்விலை ஏறியிருப்பதாலும் வெளியூர் பயிர் சேதப்பட்டிருப்பதாலும் மார்க்கட்டுகள் ஒழுங்கினமாயிருக்கின்றன. ஆதோனியில் ரூ. 7 ஆகவும் குன்ட்டூரில் ரூ. 15 ஆக விலை ஏறியிருக்கிறது. உள்ளூர் மார்க்கட்டில் யாதொரு பேரமும் நடக்கவில்லை. அவுஸ்காரர்கள் குன்ட்டூரில் வாங்குகிறார்கள். அதோனி, பல்லாரி, ரேய்ச்சூர், நந்தியால், புரோதத்தூர், ஆகிய விடங்களில் பருவகாலம் முடிந்து போய்விட்டது. குண்ட்டூரில் நல்ல கையிருப்பு. அமெரிக்க பயிர் ரிப்போர்ட்டை வாங்குகிறவர்களும் விற்பவர்களும் கவனித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதன்பிறகுதான் மார்க்கட்டின் நிலைமை நிர்ணயிக்கப்படும்.

| நாளது தேதி விலை. | | ரூ. |
|---|---|---|
| வெஸ்டர்ன்ஸ் 1 காண்டி | | ,, —160 |
| கொட்டை எடுத்த குண்டூர் | | 152—153 |
| திருப்பூர் | 1 காண்டி | ,, —180 |
| புரோச் | 782 ராத்தால் | ,, —228 |

## Ground-Nuts.

### மணிலாக் கோட்டை.

மார்க்கட் மிகவும் நயம். பருவகால முடிந்து போய்விட்டபடியால் மார்க்கட்டில் கையிருப்பில்லை. ரூ. 60 விதம் சொற்பபேரம் நடத்தப்பட்டது. காண்டினன்ட் கிராக்கியில்லை. பருப்பு வரத்து மிக அற்பம். பொள்ளாச்சிப் பயிர் நிகழ்மீ மத்தியில் எதிர்பார்க்கப்படுகிறது.

மணிலாக் கொட்டையின் நாளது தேதி விலை ரூ. 60 பருப்பு ரூ. 41, ரூ. 41½ யாக யிருக்கிறது.

## Sugar.

### சர்க்கரை.

1-9-1913.

மார்க்கட் அமரிக்கையாக யிருக்கிறது. உறுதியாக யிருக்கிறது. உள்ளூரில் ஏற்றுமதிக்காக நல்ல பேரம் நடத்தப்பட்டு வருகிறது சென்ற வாரம் ஜப்பானிலிருந்து 15 ஆயிரம் மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டன. மார்க்கட்டில் 16 ஆயிரம் மூட்டைகள் கையிருப்பிருந்தது. ஜாவாச் சர்க்கரை ஒரு மூட்டை ஒன்றுக்கு ரூ. 19-4-0 முதல் ரூ. 19-5-0 விதம் உள்ளூரில் பேரம் நடந்திருக்கிறது. ஜூலை மர்தமுதல் டிசம்பர் மாசம் வரையில் 1,50,000 மூட்டைகள் உள்ளூர் வியாபாரிகளால் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இத்துடன்கூட ஜாவாச் சர்க்கரை 100 டன் ஒரு அந்தர் ரூ. 8-12-0 விதம் உள்ளூர் அவுஸ்காரர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்கு முந்தி இன்டெண்டு கொடுத்த வியாபாரிகள் தற்கால விலையை உத்தேசிக்குமளவில் ஒரு மூட்டைக்கு 8 அணு முதல் 10 அணு வரையில் நஷ்டமடைவார்கள். ஜாவாப் பயிர் சுபிக்ஷமாயிருப்பதால் பம்பாயிலும் கல்கத்தாவிலும் ஏதேஷ்டமான கையிருப்பிருக்கிறது. ரூ 18-8-0 முதல் ரூ. 18-12-0 வரையில் விலை இறங்குமென்று வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள். பம்பாயில் விலை மாறுதலடையவில்லை. மோரிஸ் பயிர் 11 ஷிலிங் 8 பென்ஸ் முதல் 11 ஷிலிங் 8 பென்ஸ் வரையில் விலை யாகிறது B. R. B.

சரக்கு கையிருப்பு அதிகமாயில்லை. சர்க்கரைக்கு நாளது தேதி விலை ரூ. 19-5-6.

## Turmeric.

### மஞ்சள்.

1-9-1913.

மார்க்கட் மந்தமாயிருக்கிறது: உள்ளூர் பேரம்தான் நடந்துகொண்டு வருகிறது. சொற்ப ஏற்றுமதியும் நடந்திருக்கிறது. கல்கத்தாவிலிருந்தாவது கான்டினென்ட்டிலிருந்தாவது விசாரணையில்லை. மார்க்கட்டில் நல்ல ரகத்தில் அதிகப்படியான கையிருப்பில்லை. கமிஷன் விற்பனைக்காக சென்ற வாரம் கல்கத்தாவிற்கு 500 மூட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. கையிருப்பு வைத்திருப்பவர்கள் சரக்கை விற்பதற்கு விருப்பமுள்ளவர்களாயிருக்கிறார்கள். ஏன் என்றால் பூச்சுகள் சரக்கை சேதப்படுத்துகின்றது. கடப்பா ராசிக்கு நாளது தேதி விலை ஒரு கண்டிக்கி ரூ. 26 முதல் ரூ. 27. கடப்பை விரல் ரூ. 30 முதல் ரூ. 31 கரூர் விரல் ரூ. 32 ரூ 33.

## Chillies.

### மிளகாய்.

1-9-1913.

மார்க்கட் அமரிக்கை. ஏற்றுமதிக்காக உள்ளூரிலும் வெளியூரிலும் சுமாரான பேரம் நடந்திருக்கிறது. நாயுடுபெட்டைச் சரக்கு பட்டக்காய் ஆயிரம் மூட்டைகள் 16 முதல் 17 வராகன் வீதம் கொளும்பிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. நெட்டால் சரக்கிற்கு டிமாண்டில்லை. குன்ட்டூர் சரக்கிற்கு நாளது தேதி விலை 12 முதல் 13 வராகன்.

## Tamarind.

### புளி.

1-9-1913.

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. உள்ளூரில் நல்லபேரம் நடந்திருக்கிறது. கான்டினண்டிற்கு ஏற்றுமதியில்லை. வெளியூர் கிராக்கிகள் மிதமாயிருக்கிறபடியால் விலைகள் மாறுமலிருக்கின்றன. நாளது தேதி விலை ஒரு காண்டி 8 முதல் 13 வராகன்

## Gingelly.

### எள்ளு.

1-9-1913.

மார்க்கட் உறுதி; உள்ளூரில் நல்ல பேரம் நடந்திருக்கிறது. 2000 மூட்டைகள் கும்பகோணம் மதுரை, தஞ்சாவூருக்கு ஏற்றப்பட்டன. தீபாவளித் தேவைக்காக பிமிலிப் பட்டணம் ராஜாம்பேட்டை முதலிய வெளியூர் புதிய சரக்குகள் தாராளமாய் வந்துகொண்டிருக்கின்றன. மூட்டை ஒன்றுக்கு ரூ. 16 முதல் ரூ. 16-8-0 வரையில் விலையாகின்றன. கான்டினென்ட் ஏற்றுமதியில்லை. நாளது தேதி விலை 168 ராத்தல் கொண்ட ஒரு மூட்டை ரூ. 14-0-0 முதல் ரூ. 16-8-0.

## Mustard.

### கடுகு.

1-9-1913.

மார்க்கட் மந்தம், சுமாரான பேரம்; ராஜாம்பேட்டைச் சரக்கிற்கு நாளது தேதி விலை 500 ராத்தல் கொண்ட ஒரு கண்டி ரூ. 40, 41.

## Onions.

### வெங்காயம்.

1-9-1913.

மார்க்கட் அமரிக்கையாயிருக்கிறது. உறுதியாயிருக்கிறது. உள்ளூரில் உபாய பேரம். சுமார் ஆயிரம் மூட்டைகள் சென்றவாரம் சிங்கப்பூர் பினுங்கிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பெல்லாரிச் சரக்கிற்கு நாளது தேதிவிலை 514 தாட்பத்திரி ரூ. 14-8-0.

## Potatoes.

### உருளைக்கிழங்கு.

மார்க்கட் அமரிக்கையாயிருக்கிறது. உள்ளூர் பேரம் சுமார்; சிகப்பு தினுசில் சொற்பம் கல்கத்தாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. நாளது தேதிவிலை உயர்ந்த சரக்கிற்கு கண்டி ஒன்றுக்கு ரூ. 22; சாமானியச் சரக்கு ரூ. 18முதல் ரூ. 22.

## Coriander.

### கொத்தமல்லி.

ரிப்போர்ட் செய்யும்படியான யாதொரு மாறுதலுமில்லை.

## Silk Waste.

### பட்டுக்கழிவு

மார்க்கட் அமரிக்கை. உள்ளூர் அவுஸ்காரர்கள் மார்ஷேய்ல்ஸ் ஏற்றுமதிக்காக 25 ராத்தல் கொண்ட ஒரு மணங்கிற்கு ரூ. 17-6-0 விதம் ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## Rice.

### அரிசி.

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. உள்ளூர் பேரம் வெளியூர் ஏற்றுமதிக்காக நன்றாயிருக்கிறது. புழுங்கல் அரிசிக்கு வொராங்காவிலும் திண்டுக்கல்லிலும் நல்ல கிராக்கி யிருக்கிறது. குச்சி லாடி புழுங்கல் அரிசியிலை அதிகமாயிருக்கிறதென்று கல்கத்தா இறக்குமதி செய்கிறதில்லை. ஆகவே உள்ளூர்வியாபாரிகள் மூட்டைக்கு 4 அணு விதம் விலையை ஏற்றி யிருக்கிறார்கள். ரங்கூன் அரிசி தாராளமாய் இறக்குமதி செய்யப்படுகிறதில்லை. ஏன் என்றால் ரங்கூன் மார்க்கட் விலை இறங்கவில்லை. வங்காளத்தில் வெள்ளப்பிரவாகத்தை முன்னிட்டு ரெங்கூன் அரிசி 2 ஆயிரம் மூட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. ஆதலால் உள்ளூர் மார்க்கட்டில் விலை 4அணு ஏறியிருக்கிறது. இந்த ராஜதானியின் சிலபாகங்களில் மழைபெய்யாமலிருப்பதால் வெளியூருக்கு நொய்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆதலால் தென்னலை நெல்லூர் அரிசியின் விலை உயரவில்லை. நாளது தேதிவிலை—நெல்லூர் (29 படி) ரூ. 7 8-0 தென்னலை (40 படி) ரூ. 8-8-0 ரெங்கூன் (228 ராத்தல் மூட்டை) ரூ. 12-0-0 குச்சிலாடி 168 ராத்தல் மூட்டை ரூ. 11-4-0.

## Castor Seed.

### ஆமணக்கு.

1–9–1913.

மார்க்கட் நயம். எண்ணை ஆலைகளுக்காக உள்ளூரில் நல்ல பேரம் நடந்திருக்கிறது. வொராங்கள் சரக்கு 1500 மூட்டைகள் சரக்குடன் மூட்டை ரூ. 11-6-0 விதம் பேரம் நடந்திருக்கிறது. ஏற்றுமதிக்காக உள்ளூர் அவுஸ்காரர்கள் சேலம் சரக்கு 500 மூட்டைகள் வாங்கி யிருக்கிறார்கள், கான்டினன்ட் விசாரணை கேவலம். சேலம் சரக்கில் 2000 மூட்டைகள் இன்னும் மார்க்கட்டில் கையிருப்பு, எண்ணெயின் விலை ஏறவில்லை. வாங்கினவர்கள் குறைந்தவிலைக்கு விற்கத் தயாராயிருக்கிறார்கள், சேலம் சரக்கிற்கு நாளது தேதி விலை ரூ, 10-6-0 முதல் ரூ. 10-8-0 சரக்குடன்; வொராங்கல் (சரக்குடன்) ரூ, 10-4-0 ரூ, 10-6-0.

## SKINS AND HIDES.
## தோல்.
### மாறு.

பெங்களூர் மாறு வருத்து கம்மி. அயிதராபாக்கம், கோஸ்ட் மட்வாடா முதலியவைகள் வழக்கம்போல் வந்து கொண்டிருக்கிறன. ஷை சொல்லிய [illegible] சரக்குகளுக்கு சீமையில் கேள்வியிருக்கிறது. இவ்விடத்தில் தினே தினே விலையேற்றமாய்க் கொண்டு வருவதால், சீமையிலிருக்கப்பட்ட விலைக்கும், இவ்விடத்திய விலைக்கும் மெத்தவும் வித்தியாசமிருக்கிறது. ஆபீஸ்காரர்கட்கு கட்டுபிடியாகவில்லை.

### மாறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அயிதராபாக்கம் (good) | | 0 | 15 | 0 முதல் | | | |
| | | 0 | 12 | 3 | | | |
| do | fair | 0 | 14 | 8 | | | |
| do | only | 0 | 14 | 2 | | | |
| A. 1. கோஸ்ட் | | 0 | 14 | 2 to | 0 | 14 | 3 |
| மட்வாடா கொழும்பு பூசல் | | 0 | 13 | 10 to | 0 | 14 | 0 |
| do | கிளீன் | 0 | 13 | 6 to | 0 | 13 | 7 |
| பெங்களூர் பிணம் | | 0 | 13 | 7 to | 0 | 13 | 10 |
| do | ஆர்டினெரி | 0 | 13 | 2 to | 0 | 13 | 5 |
| பெல்காம் ஆப்பூர் | | 0 | 13 | 10 to | 0 | 14 | 2 |
| சிவரம் | | 0 | 12 | 6 to | 0 | 12 | 8 |
| பல்லாவரம் | | 0 | 11 | 9 to | 0 | 12 | 3 |

### யேறு.

வருத்து மிகவும் கம்மி. அநேகமாய் எல்லா ஆபீசுக்காரர்களும் வாங்குகிறார்கள். விலை எதிர்யார்க்காத விதமாய் ஏறிக்கொண்டு வருகிறது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஒசப்பேட்டை | | | | 0 | 10 | 6 |
| பெங்களூர் | | | | 0 | 10 | $5\frac{1}{8}$ |
| கோஸ்ட் | 0 | 10 | 1 | 0 | 10 | 2 |
| வெளியூர் | 0 | 9 | 0 | 0 | 9 | 9 |

### வேறு, சேறு.

சீமையில் நடக்கும் வலத்தின் முடிவை எதிர்பார்த்தவர்களும் முக்கியமான சரக்கு கட்கு கையாடவில்லை, யேனைய சரக்குகள் முன்போலவே விற்பனையாய்க்கொண்டு வருகிறது.

### வேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அயிதராபாக்கம் fair | | | | | 1 | 11 | 0 |
| do | ordny | 1 | 8 | 6 to | 1 | 9 | 6 |
| கோஸ்ட் | | 1 | 7 | 3 to | 1 | 8 | 6 |

### சேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அயிதராபாக்கம் fair | | 1 | 5 | 0 to | 1 | 5 | 6 |
| do | ordny | 1 | 4 | 0 to | 1 | 4 | 6 |
| கோஸ்ட் | | | | | 1 | 4 | 0 |
| கானூர் | | | | | 1 | 11 | 6 |
| பெங்களூர் | | | | | 1 | 10 | 6 |
| உள்ளூர் fair | | 1 | 8 | 9 to | 1 | 9 | 3 |
| do | ordny | 1 | 6 | 3 to | 1 | 7 | 6 |

---

## REVIEW OF BOOKS.
## புஸ்தக ஆராய்ச்சி.

———:‡:———

### கந்தப்புராண வசன சுருக்கம்.

நம்முடைய பார்வைக்கும் அபிப்பிராயத்திற்கும் வந்திருக்கும் இப்புத்தகம் கடப்பாரி மிஸ்டர் S சிவசுப்பிரமணிய சிவாச்சாரியாரால் எழுதப்பட்டு கும்பகோணம் லோகானுகூலன் பத்ராசியர் மிஸ்டர் C.S. ராதாகிருஷ்ணய்யரால் பதிப்பிக்கப்பட் டிருக்கிறது. சிங்காரமான செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

## Trade of the Madras Port.
## சென்னப்பட்டணம் துறைமுகத்தின் வியாபாரம்.

கடந்த அபிஷியல் வருடம் என்று சொல்லும்படியான சர்க்கார் வருடத்தில் சென்னை பட்டணத் துறைமுகத்தின் வியாபார மதிப்பு ரூ. 21·88 கோடி. அதாவது சென்னை ராஜதானியின் சராசரி வியாபாரத்துடன் சீர்தூக்கிப் பார்க்கும்போது 100-க்கு 40 ஆகிறது. முந்திய வருடத்துடன் ஒத்திட்டுப் பார்த்தால் கவர்ன்மெண்டு சம்பந்தப்பட்ட வியாபாரத்தை நீக்கி 100-க்கு 9 அதிகப்படியான வியாபாரம் நடந்திருக்கிறது. 1912-13 உடன் முடிவாகும் 8 வருஷ சராசரி மதிப்புடன் ஒத்திட்டுப் பார்த்தால் சென்ற சர்க்கார் வருஷத்திய வியாபார மதிப்பு 100-க்கு 27 அதிகப்படியாயிருக்கிறது. கடந்த ஒன்பது வருஷங்களுடன் நடந்த வியாபாரத்துடன் சீர்தூக்கிப் பார்த்தால் வருஷாவருஷம் சராசரி 100-க்கு 6 விதம் வியாபாரம் அதிகரித்துக் கொண்டு வந்திருக்கிறதென்று புலப்படுகின்றது. அதாவது ஒவ்வொரு 17 வருஷங்களுக்குள் வியாபாரம் இரட்டிப்பு மடங்கு அதிகரித்து வந்துகொண்டிருக்கிறது. அன்னியதேச சரக்குகளின் இறக்குமதி 9 வருஷ சராசரிக்கு மேல் 100—க்கு 24 அதிகரித் திருக்கின்றது. அன்னிய தேச துறைமுகங்களுக்கு அனுப்பப் பட்ட இந்தியச் சரக்குகளின் ஏற்றுமதி 100-க்கு 18 வீதம் அதிகரித்திருக்கின்றது. கடலோர வர்த்தகம் (Coasting Trade) இதை விட ஆச்சரியமான விருத்தியைக் காட்டுகின்றது. ஏன் எனில் இறக்குமதி 100-க்கு 21 வீதமும் ஏற்றுமதி 100-க்கு 53 வீதமும் அதிகரித்திருக்கின்றன. ஆகவே சென்னைத் துறை முகத்தின் வியாபாரம் சென்ற வருடங்களில் எச்சமயத்திலும் குன்றிப் போகாமல் உறுதியாய் விருத்தி அடைந்து வந்திருக்கிறது.

2

இதே மாதிரியாக 9 வருஷ காலத்தில் முக்கியச் சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதி பாரமும் அதிகரித்துக்கொண்டு வந்திருக்கிறது. சென்ற வருடத்தில் 5,96,000 டன் இறக்குமதி செய்யப்பட்டது. அதாவது கடந்த 9 வருட சராசரி இறக்குமதி பாரத்திற்குமேல் 78 ஆயிரம் டன் அதிகப்படியாய் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஏற்றுமதியும் 9 வருஷ சராசரிக்குமேல் 100-க்கு 31 வீதம் அதிகரித் திருக்கின்றது. இறக்குமதிகளுக்குள்ளாக நிலக்கரியும், சிமிட்டி உள்பட கட்டட சாமான்களும் சர்க்கரையும் மிகவும் அதிகப்படியாய் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. ஏற்றுமதிகளுக்குள்ளாக பெரும்பாலும் விதைகளும், கொட்டைகளும், எலும்பு ஆகாரமும், எரும், பருத்தியும், பஞ்சும் சராசரிக்குமேல் அதிகப்படியாய் இறக்குமதி செய்யப் பட்டிருக்கின்றன. ஆனால் தோல் ஏற்றுமதி அதிகப்படியாய் குறைந்துபோயிருப்பதாய் தெரியவருகிறது.

சென்ற வருட இறக்குமதியின் கணக்கை ஆராய்ந்து பார்த்தால் பருத்தி, சீமை ஜவுளி விசேஷமாய் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. 3·19 கோடி ரூபாய் பருத்தி சீமை ஜவுளி இறக்குமதி செய்திருக்கிறோம், வருஷத்திற்கு வருஷம் இந்தச் சரக்குகளின் இறக்குமதி உறுதியாய் ஏறிக்கொண்டு போயிருக்கின்றது 1907—08 ல் 2·61 கோடி ரூபாய் மதிப்புள்ள சரக்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது; அதற்கு அடுத்த வருஷம் 3·47 கோடி ரூபாய் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. இந்த வருடம்தான் மிதமிஞ்சின இறக்குமதி; இதன்பிறகு இறக்குமதி இறங்கிவிட்டது. 1909—10ல் ரூ, 1·91 கோடிக்குத்தான் இறக்கியிருக்கிறோம். அதற்கு அடுத்த வருடங்களில் ரூ, 2·11, 2·94, 3·25 கோடி இறக்குமதி செய் திருக்கிறோம். கோரா, வெள்ளை வர்ணச் சரக்குகள் தான் மிகவும் அதிகப் படியாய்

இறக்குமதி செய்யப் பட்டிருக்கின்றன. சீமை ஜவுளியின் விலைமதிப்பு வருஷத்திற்கு வருஷம் ஏறிக்கொண்டு போயிருக்கும்போது அவற்றின் பாரம் குறைந்து கொண்டு போயிருப்பது கவனிக்கப் படவேண்டிய விஷயம். இரண்டு லக்ஷம் டன்னிற்கு அதிகமான நிலக்கரி நாம் பிரஸ்தாப வருடத்தில் சென்னைத் துறைமுகத்தில் இறக்குமதி செய்திருக்கிறோம். முந்திய வருஷத்துடன் ஒத்திட்டுப் பார்க்கும்போது 88 ஆயிரம் டன் அதிகப்படியாய் இறக்குமதி செய்திருக்கிறோம். இறக்குமதி செய்யப்பட்ட நிலக்கரியில் ஒரு சொற்ப பாகமட்டிலும் ஆஸ்டிரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. பாக்கியில் 100க்கு 90 ஸ்டீமரிலிருந்தபடி கரையிலுள்ள வாக்கின்வண்டிகளில் ஏற்றப் பட்டன. இதற்கு முந்தி இம்மாதிரியான வசதியில்லாமல் சரக்கை ஸ்டீமரிலிருந்து இறக்கி படகுகளில் ஏற்றிக் கரைக்குக் கொண்டு போகும் போது 100க்கு 3 வீதம் சமுத்திரத்தில் விழுந்து நஷ்டமுண்டாய்க் கொண்டிருந்தது.

நிற்க, சர்க்கரையும், சிமிட்டியும் பால் முதலிய ஆகார சாமான்களின் இறக்குமதியும் உறுதியாய் ஏறிக்கொண்டு வருகின்றன என்று நாம் முந்திய சஞ்சிகைகளில் எடுத்து ஏற்கனவே கூறியிருக்கின்றோம். நூல், மோட்டார் வண்டிகளும், மோட்டார் சைக்கில்களும், யந்திரங்களும், ஆலைசாமான்களும், கடுதாசிகளும், அட்டை போர்டுகளும், ரயில் சாமான்களும், இரும்பு பொன் வெள்ளி நூலும், நெருப்புப் பெட்டிகளும், பதனிடும் சாமான்கள் முதலியனவையும் விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. தாதுப் பொருள் எண்ணைகளும், மருந்துகள், உலோகங்கள், பீங்கான், பீங்கான் சாமான்கள் ஆகிய இந்தச் சரக்குகளின் இறக்குமதி குறைந்து போயிருக்குன்றன. அன்னியதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சரக்குகளுக்குள் பதப்படுத்தின தோல் வெள்ளாட்டுத் தோல், பஞ்சு, மணிலாப்பருப்பு பருத்தி வர்ணஜவுளி, ஆமணக்கு ஆகிய இவைகளின் ஏற்றுமதி சிறிது விசேஷித் திருப்பதாகத் தெரிகின்றது. மொத்தத்தில் முந்திய வருஷத்தைவிட பிரஸ்தாப வருடத்தில் 50லக்ஷ ரூபாய்ச் சரக்கு அதிகப்படியாய் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. பதனிட்ட தோல், பருத்திகை குட்டைகளின் ஏற்றுமதி சிறிது குறைந்து போயிருப்பது கவனிக்கப்பட வேண்டிய விஷயம். சென்ற வருஷத்தில் பதனிட்ட தோலின் ஏற்றுமதி சுமார் 40 லக்ஷத்திற்குக் குறைந்து போயிருக்கிறது. ஆயினும் பதனிட்ட எருமைத் தோலின் ஏற்றுமதி விசேஷித்திருக்கிறது. 53 லக்ஷ ரூபாய் பொருமான முள்ள மணிலாக் கொட்டை சென்ற அபிஷியல் வருஷத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்தில் 65 ஆயிரம் டன் மணிலாக் கொட்டை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிற போது அதற்கு முந்திய வருடத்தில் 58 ஆயிரம் டன்தான் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவற்றில் பாதிச்சரக்கு கல்கத்தா விற்குப் போயிருக்கிறது; ஏனெனில் இப்போது அந்தப் பிராந்தியத்தில் ஜனங்கள் மணிலாக் கொட்டை எண்ணையை சமயலுக்குக்கூட உபயோகித்துக் கொண்டு வரத் தலைப்பட்டிருக்கிறார்கள். மணிலாக் கொட்டை கல்கத்தா விற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது ஏதோ ஒரு சமயத்தில் ஏற்றுமதி செய்யப் பட்டதாக எண்ணக்கூடாது. ஏற்றுமதி எப்போதும் சாசுவதமாயிருக்கு மென்பதற்குச் சின்னங்கள் தோன்றுகின்றன. வேர்க்கடலையில் ஐரோப்பா ஏற்றுமதிகூட விசேஷித் திருக்கின்றது மணிலாக் கொட்டை சாகுபடியின் விஸ்தீரணம் உறுதியாய் விசாலப்பட்டுக் கொண்டு வருகிறது. ஆகைகயால் போகப் போக இந்த

வியாபாரம் இன்னும் பலப்பட்டு நடக்கும் போல் தோற்றுகிறது. 2 கோடி ரூபாய் மதிப்புள்ள 16 ஆயிரம் டன் பஞ்சு சென்ற வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. கடல் கரையோர வியாபாரம் (Coasting trade) 100 க்கு 41 வீதம் அதிகரித் திருக்கின்றது. ஏனென்றால் சென்ற வருஷத்தில் தானியங்களும் பருப்பும், தாதுப் பொருள் எண்ணெய்களும், நிலக்கரியும், தேக்கு மரமும் சாக்குகளும் சென்னை துறைமுகத்தில் விசேஷமாக ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கின்றன; தோலும் அச்சடிக்கும் கடித இறக்குமதிகளும் குறைந்து போயிருக்கின்றன.

## Dr. Ghose's Gift.
## டாக்டர் ராஷ்விகாரி கோஷின் நன்கொடை.

டாக்டர் ராஷ் விகாரி கோஷ் என்பவர் வங்காளத்து லாயர்; வருஷம் ஒன்றுக்கு இரண்டு லக்ஷத்திற்கு குறையாத வருமான முடையவர்; தேசாபிமானி. வைசிராய் சட்டசபையில் மெம்பராயிருக்கையில் ராஜத்துரோக சம்பந்தமான மீடிங்குகளை தடைப்படுத்தும் ஆக்ட் பப்பாஸ் செய்யப்படும் போது ஆக்ஷேபித்து பலமான பிரசங்கம் செய்ததில் இவருடைய திருநாமமும் பெருமையும் கீர்த்தியும் வெளிவந்தன. இந்த பெருமை பொருந்திய லாயர் தம்முடைய தேச ஜனங்கள் தற்கால சாஸ்திரப் படிப்பையும் தொழிற் படிப்பையும் அறிந்து கொண்டு முதன்மைப்பட்டு வரவேண்டு மென்கிற நோக்கத்துடன் கல்கத்தா சர்வ கலாசாலையைச் சேர்ந்த சாஸ்திர கலாசாலைக்கு 10 லக்ஷ ரூபாய் நன்கொடை கொடுத்திருப்பதற்கு இத்தேசத்திலுள்ள எல்லா ஜனங்களும் சந்தோஷப் படுவது போல நாமும் சந்தோஷப் படுகின்றோம். இன்னும் சில்காலம் சென்ற பிறகு இந்த தருமத் தொகையை இரட்டிப்பதாயும் கூறியிருக்கிறார். இந்த நன் கொடையை ஒப்புக் கொள்ளும்படி சிண்டிகேட்டார் செய்திருக்கும் சிபார்சைப் பற்றி ஆலோஜனை செய்ய கல்கத்தா சர்வகலாசாலையின் செனேட்டார் கூடிய மீட்டிங்கில் கல்கத்தா ஐக்கோர்ட்டு ஜட்ஜியாயிருக்கும் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்டீபன், டாக்டர் கோஷ் அவர்களின் குணாதிசயங்களைப் பற்றிப் புகழ்ந்து பேசினார். இந்திய தேச ஜனங்களுக்குள் பொது நன்மையான காரியங்களில் சுயநலம் பாராட்டாமலும் தாராளமான உபகாரச் சிந்தனையுடனும் உழைக்கும் இயல்பு சூனியமா யிருக்கின்றது என்று வெகு ஜனங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் டாக்டர் ராஷ்விகாரி கோஷின் பெருமை பொருந்திய நன்கொடை அப்பேர்ப்பட்ட எண்ணத்தை வெகு தூரத்தில் துரத்திவிட்டதென்றும் சொன்னார். டாக்டர் கோஷின் பிரஸ்தாப நன்கொடை பிரிடிஷ் சர்வகலாசாலைகளுக்கு செய்யப்பட்டிருக்கும் நன்கொடைகளைவிட பெரிதாயிருக்கிறது.

டாக்டர் கோஷையைப் போலவே சர் டாராநாத் பாலீயாட் என்பவர் சென்ற வருடம் 15-லக்ஷ ரூபாய் நன்கொடை கொடுத்து சாஸ்திர கலாசாலை ஸ்தாபித்து வைத்தனர். இப்பேர்ப்பட்ட நன்கொடைகளின் முக்கியமான நன்மை என்னவென்றால், இந்திய மாணாக்கர்கள் தங்களுடைய படிப்பைப் பூர்த்தி படுத்திக் கொள்ளுவதற்காக அன்னிய தேசங்களுக்குப் போகவேண்டிய அவசியம் ஏற்படமாட்டாதென்று சொன்னார். டாக்டர் கோஷ் பிரஸ்தாப நன்கொடை அளித்த விஷயத்தைக் குறித்து அவருடைய சிஷ்யராகவும் சர்வகலாசாலைக்கு வைஸ் சான் சிலராகவு மிருக்கும் சர் அஷுடாஷ் முக்கர்ஜிக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் சில நிபந்தனைகளும் குறிப்பிட் டிருக்கின்றனர்; அவற்றில் முக்கியமான அம்சங்களை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்து வரைகின்றோம்:—

(1) வருடத்தில் 100 க்கு 4 வட்டி கிடைக்கக்கூடிய சர்கார்பத்திரங்களில் நன்கொடைப் பணம் முடக்கப்படவேண்டும்.

(2) (a) கணக்கு (b) பிரகிருதி சாஸ்திரம் (c) ரசாயான சாஸ்திரம் (d) மூலிகை நூல் ஆகிய இந்த நான்குவிதமான படிப்பு போதிக்கப்பட வேண்டும்; ஒவ்வொரு படிப்பிற்கும் ஒவ்வொரு போதகாசிரியர் வீதம் நான்கு போதகாசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும்.

(3) போதகாசிரியர்கள் எல்லோரும் இந்தியப் பெற்றோர்களுக்குப் பிறந்த இந்தியர் களாக விருக்கவேண்டும்.

(4) பிரஸ்தாப நன்கொடை நிதியிலிருந்து வருஷம் ஒன்றுக்கு ஒவ்வொரு போதகாசிரியருக்கு ரூ. 6 ஆயிரம் சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

(5) புரோபசர்கள் பின்னால் சொல்லப் போகிற போர்டாரால் குறிப்பிடப்பட்டு சென்னெட்டாரால் நியமிக்கப்படவேண்டும். புரோபசர்கள் உத்தியோகங்களிலிருந்து நீக்கப்பட வேண்டுமானால் போர்டாருக்கு அறிவித்து அவர்கள் யோஜனையின்பேரில் தான் நீக்கப்படவேண்டும்.

(6) புரோபசர்கள் உத்தியோகங்களை ஒப்புக் கொள்வதற்கு முந்தி ஐரோப்பா, அமெரிக்கா ஜப்பான் ஆகிய இத்தேசங்களில் நிபுணர்களிடமிருந்து அனுபோகமடைய வேண்டுமென்று சென்னெட்டார் அபிப்பிராயப்பட்டால், அப்படியே ஒருவருஷத்திற்குக் குறையாமலும் இரண்டு வருஷத்திற்கு மேற்படாமலும் அனுபோகப் படிப்பு அடையும்படி அத்தேசங்களுக்கு அனுப்பி வைக்கப்படலாம். அனுபோகப் படிப்பு காலத்துச் செலவுகளும் சம்பளமும் இந்த நிதியிலிருந்தே கொடுக்கப்பட வேண்டும்.

(7) ஒவ்வொரு புரோபசரும் அவருடைய படிப்பு இலாகாவில் செய்யப்படவேண்டிய சுயமான ஆராய்ச்சிகளைச் செய்து வித்தைகளையும் கைத்தொழிற்களையும், செயர்கைப் பொருள்களையும் தேசத்தின் விவசாயத்தையும் விருத்தி செய்து வரவேண்டும்.

(8) 8 சிஷிய ஸ்தானங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷத்திற்கு 900 ரூ சம்பளம் இந்த நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு வரவேண்டும். ஒவ்வொருபுரோபசருக்கும் இரண்டு சிஷியர்கள் கொடுக்கப்படவேண்டும்; புரோபசர்கள் ஆராய்ச்சி செய்து நூதனங்களைக் கண்டுபிடிப்பதில் உதவி புரிந்து கொண்டு வரவேண்டும்.

(9) & (10) ... ... ... ... ... ... ...

(11) தேவையான ஆராய்ச்சிச் சாலைகளும் காக்ஷிச்சாலைகளும் வொர்க்ஷாப்புகளும் தளவாடசாமான்களுக்கும் இந் நிதியின் வருமானத்தைக் கொண்டே ஏற்படுத்தப் படவேண்டும்.

(12) இந் நிதியில் புரோபசர்களுக்கும் மாணுக்கர்களுக்கும் சம்பளப்பணம் உபகாரப் பணம் பட்டுவாடா செய்யப்பட்ட பின்பு பணம் மீர்ந்திருந்தால் புரோபசர்கள் ஆராய்ச்சிக்குத் தேவையான மியூசியங்களையும் வேலை ஸ்தலங்களையும் பலப்படுத்துவதில் பிரயோகப் படுத்தப் படவேண்டும்.

(13) இந்த நிதியை மானேஜ்மெண்டு செய்து வரும் போர்டில் 15 பேர்க ளிருக்கவேண்டும்.

(1) சர்வ கலாசாலையின் வைஸ்சான்சிலர் பிரஸிடெண்ட்.

(2) வங்காள மாகாணத்து வித்தை இலாக்காத் தலைவர்.

(3) சர்வ கலாசாலையின் சாஸ்திர இலாக்காத் தலைவர்.

(4) ஷை இன்ஜினீரிங் இலாக்காத் தலைவர்.

(5—8) மேலே சொல்லப்பட்ட நான்கு புரோபசர்கள்

(9-12) சென்னெட்டால் வருஷா வருஷம் சர்வ கலாசாலை சம்பந்த முடைய மூன்று மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டும்.

(13—15) (1) ஆனரபில் சர் அஷுடோஷ் முக்கர்ஜி.

(2) புரோபசர் புரோபுலாச் சந்திரரே

(3) ஆனரபில் பாபு மகேந்திரநாத் ரே- இவர்கள் நன்கொடை கர்த்தரால் நியமிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஸ்தானங்களுக்கு இவர்களுடைய காலத்திற்குப் பின்பு மெம்பர் நியமித்துக்கொள்ள இவர்களுக்கு பாத்தியதை கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

## The Indian Commercial Congress.
## இந்தியன் வியாபாரக் காங்கிரஸ்.

:o:

ஆனரபில் சர் பாசல்பாய் கரிம்பாய் என்பவர் பம்பாயில் பாரி வர்த்தகர். அனேக பெரிய ஆலைகளுக்குச் சொந்தக்காரராகவிருக்கும் படியான பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றனர். அமேரிக்கா தேசத்து கார்னிகி என்கிற கோடீஸ்வரனைப் போல் திரண்ட தனச் செல்வமும் பொருந்தப் பெற்றவர். இவர்வர்த்தக ராஜகுமாரன் என்கிற திருநாமத்தால் வழங்கப்படுகின்றனர். இந்த கனவான் இந்தியாவில் காங்கிரஸ் மகாசபை கூடி வருவது போலக் வர்த்தக விஷயங்களைப் பற்றிக் கவனித்து விருத்தி படுத்திக்கொண்டு வரும் பொருட்டு ஒரு வியாபார காங்கிரசும் கூட்ட படவேண்டு மென்று பிரரேபணை செய்து அடியிற்கண்ட பொருளடங்கிய ஒரு கடிதம் "டைம்ஸ் ஆப் இந்தியா" (Times of India) என்கிற ஆங்கிலப்பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றனர்:—

கைத்தொழில் விஷயத்திலும் வர்த்தக விஷயத்திலும் இந்துக்களுக்குள்ள பற்றுதல் தற்காலத்தில் விரைவில் அதிகரித்துக் கொண்டு வருகின்றன வென்பதற்கு சந்தோஷ கரமான சின்னங்கள் வெளிப் படையாய்த் தெரிகின்றன. உத்திரவாதம் குன்றிய சில வங்காள ஜனத்தலைவர்கள் ஏற்பாடு செய்த சுதேசமுயற்சியின் மிதமிஞ்சினவும் சாத்தியமாகாத எத்தனங்கள் ஏற்கனவே எதிர் பார்க்கப் பட்டபடி சாமானிய அறிவு அனுபோக மென்கிற வெளிச்சத்தின் முன்னில் ஆவிபோல் பறந்தோடி விட்டன! மீந்தது என்னவென்றால், இந்தியாவின் பொருளாதாரங்கள் எல்லா ஜனங்களுக்கும் உபயோகப் படும்படியான வழியில் நடக்க என்ன என்ன ஏற்பாடுகள் செய்யவேண்டுமோ அவைகள் எல்லாம் செய்யப் படவேண்டு மென்கிற அமரிக்கையும் நியாயமும் அமைந்த ஆசையை! ஒருதேசத்தின் பொருளாதாரமும் சன்மார்க்க ஆதாரமும் அத்தேசத்தில் வசிக்கும் படியான ஜனங்களு மட்டிலும் சொந்தமல்ல. உலகத்தில் வசிக்கும் படியான எல்லா ஜனங்களுக்கும் சொந்த மானவை என்கிற உண்மையான சித்தாந்தத்தை வரவர ஜனங்கள் ஒப்புக் கொண்டு வருகிறார்கள். ஆகவே இந்தியா பரிடிஷ்ராஜ்ஜியத்தின் ஒரு பாகமாக விருந்து வருவதை முன்னிட்டு அதற்குக்கிடைத்திருக்கும் அமரிக்கையையும் படிப்பு வசதியையும் உபயோகப்படுத்திக் கொண்டிருப் பதற்காக, இந்தியர்கள் நாகரீக உலகத்தாருக்கு உத்திரவாதி களாகயிருக்கிறார்கள். இப்போது கைத்தொழில் விஷயத்திலும் வியாபார விஷயத்திலும் இந்தியர்களுக் கிருக்கும் பற்றுதல் அதிகரித்து வருகிறதென்பதற்கு அறிகுறிகளாக அவைகள் விஷயமாக அனேக சங்கங்களும் ஸ்தாபனங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவற்றில் சிலவைதகுந்த நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கின்றன. சிலவை தகுந்த யோஜனையுடனும் அறிவுடனும் ஏற்பாடு செய்யப்படாமற் போயிருந்த போதிலும் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் சோர்வடையக் கூடாதென்கிற உற்சாகமா

ன எண்ணத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. கடந்த 5 வருஷகாலத்திற் குள்ளாக முக்கியமாய் வியாபாரம், கைத்தொழில், ஐக்கிய முயற்சி ஆகிய இந்த விஷயமாக பல பத்திரிகைகள் உற்பத்தியாயிருக்கின்றன. முக்கியமாய் விவசாயத்தைப் பற்றிப் பேசும் ஜர்னல்களும் வெளிவந்திருக்கின்றன. இந்திய வர்த்தக சேம்பர்கள் என்கிற ஆலோஜனை சபையார்கள் இந்திய வியாபாரிகள் அச் சேம்பர்களில் மெம்பர்களாக விருக்க வேண்டு மென்கிற பாத்தியதையையும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிகளை எல்லாம் ஒன்றாய்த் திரட்டி தக்கபடி யோஜனை செய்து பொதுவான ஒரு வாய்க்கல் வழியாக ஒடும்படி செய்ய உண்மையில் பிரயத்தனம் செய்ய வேண்டிய காலம் இப்போது வந்து விட்டதென்றும் நான் அபிப்பிராயப் படுகின்றேன். ஆகையால் இந்திய வர்த்தகர்களும், வர்த்தக விஷயத்திலும் கைதொழில் விஷயத்திலும் பற்றுடைய மற்றவர்களும் சேர்ந்து வர்த்தக விஷயமாகவும் கைத்தொழில் விஷயமாகவும் ஒரு காங்கிரஸ் நடத்த வேண்டுமென்று உங்களுடைய பத்திரிகை மூலியமாக பிரரேபனை செய்ய விரும்புகின்றேன். காங்கிரஸ் கூடுவது ஆரம்பத்தில் இரண்டு வருஷம் அல்லது மூன்று வருடத்திற்கு ஒரு முறை கூடினால் போதுமான தென்று எண்ணுகின்றேன். இந்தியாவின் பொருளாதார விருத்தியில் பற்றுடைய எல்லோரும் இதில் சேர வேண்டு மென்று வேண்டுகின்றேன். போகப் போக, நாஷனல் காங்கிரசினுடன் வருஷா வருஷம் கூடும் கைத்தொழில் காங்கிரசிற்குப் பதிலாக பிரஸ்தாப காங்கிரசையே நடத்திக் கொண்டு வரலாம். நான் பிரரேபனை செய்திருக்கும் இந்தக் காங்கிரஸ் தகுந்த வாய்க்கால்கள் மூலியமாய்த் தன்னுடைய அபிப்பிராயத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும். மேலும் இந்திய வர்த்தக வகுப்பாரும் இந்தியா கவர்ன்மெண்டாரும் பரஸ்பர அபிப்ராயங்களை அறிவித்துக் கொள்ள தகுந்த மத்தியஸ் தான (Medium) மாகவிருக்கும்; குடியேற்ற நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் கிரேட் பிரிட்டன் தாராளமான வர்த்தக ஏற்பாடுகள் செய்யப்போகிறதாக எதிர் பார்க்கப் படுகிறது. இப்பேர்ப்பட்ட ஒரு சமயத்தில் இந்திய வர்த்தகர்களின் அபிப்பிராயத்தை அறிவிக்கும் படியானவும் கிரேட் பிரிட்டனாலும் ஒப்புக் கொள்ளப் பட்டவுமான ஒரு ஸ்தாபனம் ஏற்பட வேண்டியது மிகவும் அவசியம். அது, ராஜ்ஜிய மந்திரா லோஜனை சபைகளில் இந்தியர் உரிமைகளைப் பற்றி அதிகாரத்துடன் பலமாய் வாதிக்கும். அது அறிவித்துக் கொள்ளுவதும் கவர்ன்மெண்டாருடைய கவனத்தைப் பற்றும். தேசத்திலுள் இந்தியப் பத்திரிகைகளும் பிரேமுகர்களும் இந்த பிரரேபனையை கவனித்து ஆராய்ந்து யோசனை செய்து கூடிய சீக்கிரம் முடிவு செய்து முயற்சியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்வார்கள் என்று நம்புகின்றேன். அவசிய மாயிருந்தால், பிரேமுகர்கள் ஒன்று சேர்ந்து டில்லி, பம்பாய், அல்லது கல்கத்தாவிலாவது கூடிக்கலந்து யோஜனை செய்ய ஏற்பாடும் செய்யப்படலாம்.

இந்தப் பிரரேபனையை டைமஸ் ஆப் இந்தியாப் பத்திரிகையும் பயோனீயர் பத்திரிகையில் கல்கத்தா நிருபரும் அங்கீகரித்து எழுதியிருக்கிறார்கள். மதிராஸ் மெயில் பத்திரிகையிலும் ஒரு நிருபர் அங்கீகரித்து அடியிற் காணும் பொருளடங்கிய ஒரு கடிதம் எழுதியிருக்கின்றனர் :—

ஆங்கிலப் படிப்பும் நாகரீகமும் பரவத் தலைப்பட்டு 50 வருஷங்களுக்குப் பிறகு வர்த்தக விஷயமாகவும் கைத்தொழில் விஷயமாகவும் ... ... ... ... ... ... ... ... ... ஒரு காங்கிரஸ் நடத்த ஏற்பாடு செய்யப் படவேண்டு மென்று பம்பாய் வர்த்தக இராஜ குமாரன் என்று வழங்கிவரப்படும் ஆனரபில் சர் பாசல்பாய் கரிம்பாயிக்கு தோற்றியிருக்கிறது. அவருடைய

அபிப்பிராயம் சிலாக்கியமாய் அங்கீகரிக்கப் படத் தக்கதாயிருக்கிறது. அரசாங்க விஷயங்களுக்காகவும், மதத்திற்காகவும், ஆசாரச்சீர்திருத்தத்திற்காகவும், சுகாதாரத்திற்காகவும், வைத்தியத்திற்காகவும், இன்னும் அனேக விஷயங்களுக்காகவும் காங்கிரஸ்களும் கான்பரன்ஸ்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போது பிரபலமாய் விளங்கும் ஒவ்வொரு வம்சத்தாரும் வர்த்தகத்தால் முதன்மைப்பட்டு வந்திருக்கிறார்களே ஒழிய மற்றப்படி வேறில்லை. உலகத்திலுள்ள நாகரீக ஜாதியார்களுக்குள் இந்தியர்களும் சேர்ந்திருக்க வேண்டுமானால் ஒவ்வொரு இந்தியனும் வர்த்தகம் தழைத்தோங்கப்பாடுபட்டேத் தீரவேண்டும்! இப்பேர்ப்பட்ட வர்த்தகத்திற்கு நமக்கு இந்தியாவில் காங்கிரசில்லை. ஒரு தேசத்தாரின் நாகரீகம் உயர்வடைந்திருப்பதற்கு அடையாளம் என்னவென்றால், அவர்கள் பெரிய வியாபாரிகளாக விருப்பதே. தேசத்தின் பொருளாதாரம் சராசரி இந்தியனுக்குப் பெரும்பாலும் தெரிய மாட்டாதென்பது உண்மை. ஏன் எனில் பேசும் பாஷை ஒரு தடையாயிருந்தது. இந்தியாவில் ஒரு மாகாணத்திலிருப்பவன் மற்றொரு மாகாணத்திலிருப்பவனுடைய பாஷையை அறியமாட்டான். ஆனால் ஆங்கிலப் படிப்பு பரவியபின்பு வழி திறந்துவிடப்பட்டிருக்கிறது.

எவன் ஒருவனுக்கு இங்கிலீஷ் எழுதப் படிக்கத் தெரியுமோ அவன் சிம்லா முதல் கன்னியாகுமரி முனைவரையிலும் ஷான்மாகாணங்களிலிருந்து பெலுச்சிஸ்டான் ஓரம்வரையிலும் பிரயாணம் செய்து எந்தவிதமான வியாபாரத்தையும் செய்யக்கூடும். இந்தியாவின் பொருளாதாரத்தின் நன்மையைப் பொது ஜனங்கள் அடையும்படியாக உழைப்பதுதான் இந்தியாவின் க்ஷேமத்தில் நோக்கமுடைய ஒவ்வொரு இந்தியனுடைய கொள்கையும் கருத்தாகவு மிருக்கவேண்டும். அரசாங்க உரிமைகள் கொடுக்கப்படுவதாலும் வற்கனவே யிருக்கும் சர்க்கார் உத்தியோகங்களுடன் இன்னும் சில உத்தியோகங்கள் சேர்க்கப்படுவதாலும் தேசம் பொருளாதாரத்தில் விருத்திப்படமாட்டாது. ஒரு தேச ஜனங்களின் பொருளாதார விருத்தியை வளர்த்துக்கொண்டுபோவது கைத்தொழிலும் வியாபாரமுமே யொழிய மற்றப்படி எதுவும் வளர்க்கமாட்டாது. ஆகையால் இது விஷயமாக ஆனரபில் சர்பாசல்பாய் கரிம்பாய் அவருடைய தேசத்தார்களுக்குச் சொல்லக்கூடிய புத்திமதி என்னவென்றால் "விழித்துக்கொள்ளுங்கள்! எழுந்திருங்கள்! இல்லேல் எப்போதும் கீழே விழுந்து கிடங்கள்!" இவ்வுலகத்தின் நாகரீக ஜாதியார்களுக்குள் இந்தியர்கள் கடைசியாயிருக்கிறார்கள். மற்ற தேசத்தார்கள் எவ்வளவு பொருளாதாரம் பொருந்தப் பெற்றிருக்கிறார்களோ அவ்வளவும் இந்தியர்களுக்கிருக்கின்றன. உலகத்திலிருக்கும் மற்ற நாகரீகஜாதியார்கள் இந்தியர்களாகிய நம்மை மன்னிக்கும்படி நாம் எப்படி கேட்டுக்கொள்ளக் கூடும்?

வியாபாரம் கைத்தொழில் என்கிற ஆகாயத்தை மூடிக்கொண்டிருந்த சோம்பேரித் தன்மைதான் இந்தியாவின் தற்கால கேவல நிலைமைக்கு முக்கிய காரணமாயிருக்கின்றது. இந்திய வர்த்தக நிபுணர்களுடைய உத்திரவின் பேரில் வியாபார சம்பந்தமான பத்திரிகைகளும் பிரசுரங்களும் அச்சடிக்கப்பட்டு விசாலமாய் பயிரங்கப்படுத்தப்பட வேண்டும். ஆதரிப்பார் அற்று சோர்வடைந்து கொண்டு வரும் உள்நாட்டுக் கைத்தொழில்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். பல மாகாணங்களிலிருந்து பிரதிநிதிகள் ஆஜராகி கலந்துபேசும்படியான ஒரு காங்கிரஸ் உடனேகூட்டப்பட்டால் ஒழிய நிபுணர்களுடைய அபிப்பிராயங்களை அனுசரித்து ஒழுங்கான வேலை நடத்த நம்மால் இயலாது.

இந்த ராஜதானி சம்பந்தப்பட்ட வரையில், தென்னிந்தியாச் சேம்பர்ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக ஆலோசனை சபை ஸ்தாபனமான 1909 ம் வருடம் முதல் சில வேலைகளைச் செய்துகொண்டு வருகின்றது. கொஞ்சகாலமாக அச்சபையால் இரண்டுவாரத்திற் கொருமுறை ஒரு பத்திரிகையும் பிரகாஞ் செய்யப்பட்டு வருகின்றது. மெசர்ஸ் ஹாயத்பாட்ச்சா சாயெப் கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் நா. முத்துசாமி நாயுடு அவர்கள் சென்னை இந்தியவர்த்தக விஷயங்களில் கூர்மையானவும் அனுபோகமுமுள்ள பற்றுதல் காட்டிவருகின்றனர்.

இங்கிலீஷ்காரர்களைப் போலவே இந்திய வியாபாரத்தையும் நடத்துவார்கள் என்று நம்பப்படக் கூடிய இன்னும் சில கனவான்களுமிருக்கிறார்கள். வெளியூர்களில் வர்த்தக சங்கங்கள் எதேஷ்டமாயில்லை. இந்தியா வியாபார விருத்தியாம்சத்தில் முதற்மைப்பட்டு நிற்கும் ராஜதானி எதென்றால் பம்பாய்தான்! கல்கத்தா நீங்கலாக மற்ற மாகாணங்களெல்லாம் பிற்போக்கான நிலைமையிலிருக்கின்றன. ஆனரபில் சர்பாசல்பாய் கரிம்பாய் அவர்களின் பிரரேபனை ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாயிருப்பதுமன்றி பெருமையுடையதாயு மிருக்கின்றது. ஆகவே வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் பற்றுடைய என்னுடைய தேசத்தினர் ஒவ்வொருவரும் ஹிந்துவாயிருந்தாலும் சரி, முகமதியரா யிருந்தாலும்சரி, கிறிஸ்தவராயிருந்தாலும்சரி, ஆனரபில் சர்பாசல்பாய் கரிம்பாய் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இம்முயற்சியில் கூட்டுறவு காட்டிக்கலந்துகொண்டு காங்கிரஸ் கூட்டுவதற்காக யோஜனைகள் செய்யும்பொருட்டு ஒரு கான்பரஸ் ஏற்படுத்தவேண்டிய அவசியமான விஷயங்களைச் செய்யவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்ளுகிறேன்.

—:(*):—

## A State Bank for India.

## இந்தியாவிற்கு ஒரு சர்க்கார் பாங்க்.

மதிராஸ், வங்காளம், பம்பாய் பாங்கிகளாகிய இம்மூன்றையும் ஒன்றாய்ச் சேர்த்து ஒரு சர்க்கார் பாங்கியாகச் செய்துவிட வேணுமென்கிற ஏற்பாடு கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையிலிருந்து வருகிறதென்று நாம் முன்னொரு சஞ்சிகையில் எடுத்துச்சொல்லியிருந்தோம். அதன் பிறகு அந்த யோஜனை என்ன முடிவை அடைந்திருக்கிற தென்று தெரியாமலிருந்தது. ஆனால் கடந்த மாதம் 7-ந் தேதி பார்லிமெண்டில் இந்தியாவின் அண்டர் செக்ரேட்டரியாகவிருக்கும் மிஸ்டர் மான்டேக் இந்திய வரவு செலவு திட்டகணக்கைப் பற்றி பேசியபோது இந்தியால் ஏற்படுத்த உத்தேசம் செய்யப்பட்டிருக்கும் சர்க்கார் பாங்கியைக்குறித்து அடியிற்கண்டபடி பேசினார்:—

"ஒரு சர்க்கார் பாங்க் இந்தியாவில் ஏற்படுத்த வேண்டுமென்கிற பிரரேபனை வெகுகாலமாக யோஜனையிலிருந்து வருகிறது. ஏற்படுத்தினால் உசிதமாயிருக்கும் என்று இந்தியாவிலும் இங்கிலாண்டிலும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. அப்படி ஏற்பட்டால் இப்போது இந்தியா ஆபிசுக்கிருக்கும் பண சம்பந்தமான மிதமிஞ்சின வேலைகள்மட்டுப்படுவதுமன்றி அனேககஷ்டங்களும் நீங்கிப்போகும். கவர்ன்மெண்டு கையிருப்புக்களையும், நோட்டுகளையும் இந்தியாவின் கவுன்சில் பில்லுகளையும் வைத்துக்கொண்டு மானேஜ்மெண்டு செய்துவரக்கூடிய ஒரு சர்க்கார் பாங்கி இந்தியாவில் ஏற்படுத்துவதைக் குறித்து புனராலோஜனை செய்யும்படியான காலம் வந்துவிட்டதென்று இந்தியா செக்ரேட்ரியாகிய லார்ட் குரூ அபிப்பிராயப் படுகின்றனர். இதைக்குறித்து இந்தியா

ஆபிசில், அஸிஸ்டன்ட் அண்டர் செக்ரேட்டரியாக விருக்கும் மிஸ்டர் லயன்ஸ் அப்ரகாம் ஒரு குறிப்பு தயார் செய்திருக்கின்றனர். அதைப் பார்வையிட்ட இந்தியா காரியதரிசி யாதொரு அபிப்பிராயமும் சொல்லாமல் இப்போது இங்கிலாண்டில் கூடியிருக்கும் ராயல் கமிஷனுடைய ஆலோஜனைக்கு அனுப்பும்படி உத்திரவிட்டிருக்கின்றனர். இந்த விஷயத்தைப் பற்றிக்கூட விசாரணை செய்வதற்கு ராயல் கமிஷனுக்கு அதிகாரமிருக்கிறது.

## பம்பாய் அபிப்பிராயம்.

பம்பாய் பாங்கியின் வருஷபூர்த்திக் கூட்டத்திற்குச் சேர்மெனாக விருந்த சர் சார்லஸ் ஆரம்ஸ்டிராங் என்பவர் அடியிற்கண்டபடி பேசியிருக்கின்றனர்:—

ஒரு சர்க்கார் பாங்கி ஏற்பட்டால் உபயோகமாகவிருக்கும் என்பதை, சில ஜனங்கள் அபிப்பிராயப்படுவதுபோல, பம்பாய் ஜனங்கள் சந்தேகிக்கவில்லை. ஆனால் அந்த பாங்கிக்கு என்ன என்ன கடமைகள் ஒப்புவிக்கப்படும் என்பது விபரமாய்த் தெரிந்துக் கொள்ளும் பரியந்தம் அதுவிஷயம் திருப்திகரமாக ஆலோசனை செய்யப்பட முடியாதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உத்தேசத்திலிருக்கும் சர்க்கார் பாங்க் நோட்டையும், கவர்ன்மெண்டு கையிருப்பையும் பொன் கையிருப்பையும் மானேஜ்மெண்டு செய்துவந்தால் வர்த்தகத்திற்கும் எல்லா வகுப்பாருக்கும் நன்மையைப் பயக்குமென்று சொல்ல நான் தாமதிக்கமாட்டேன். இந்த பாங்கியின் எட்குவார்ட்டர் ஸ்தானம் எவ்விடத்தில் வைக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியும் பம்பாய் இதுவரையில் யாதொரு அபிப்பிராயமும் கூறவில்லை.

## சென்னப்பட்டணம் அபிப்பிராயம்.

மெஸர்ஸ் பின்னி அண்டு கம்பெனிக்கு தலைமைஸ்தானம் வகித்துவரும் மிஸ்டர் J. A. பாய்சன் என்பவர் மதிராஸ் பாங்க் விஷயங்களில் கடந்த 34 வருஷங்களாக அனுபோகமுடையவர். இவர் மேற்படி பாங்கியின் டைரக்ட்டர்கள் கூடிய போர்டிற்கு சென்றவருடம் சேர்மனாக விருந்தனர். கடந்த வருஷபூர்த்தி மீட்டிங்கில் இவர் சேர்மேனாயிருந்து அடியிற் குறிப்பிட்டபடி சர்க்கார் பாங்க்கைப்பற்றி பேசியிருக்கின்றனர்:—

இந்தியாவில் சர்க்கார் பாங்க் ஏற்படுத்த வேண்டுமென்கிற பிரரேபணை நூதனமானதல்ல. 15 வருஷங்களாக யோஜனையிலிருந்து வருகின்றது. அனேக ராஜதந்திரிகள் உத்தியோகஸ்தர்கள் முதலாளிகளுடைய சம்மதத்தையும் பவுலர் கமிஷனுடைய சம்மதத்தையும் பெற்றிருக்கிறது. இந்தப் பிரரேபணை அங்கீகரிக்கப்படுவதும் படாததும் இந்தியா கவர்ன்மெண்டாருடையவும் இந்தியா மந்திரியினுடையவுமான நோக்கத்தைப் பொருத்ததாயிருக்கிறது. இப்போது இங்கிலாண்டில் வீற்றிருந்து விசாரணை செய்துவரும் ராயல் கமிஷன் இதுவிஷயமாக என்ன முடிவுசெய்யப் போகிறதென்று நாம் பொறுமையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். அக்கமிஷன் செய்யும் தீர்மானம் அனுபோகத்துடன் அனுஸரித்துக்கொள்ளக்கூடிய தாயிருந்தாலும் அது செய்தமுடிவும் ஏற்றுக்கொள்ளப்படுமென்று நான் சொல்லவில்லை. மதிராஸ் பாங்கிலும் அதன் கிளைகளிலும் 4 வாரங்களுக்குள் நோட்டு, பொன், வெள்ளி எவ்வளவு வரவு செலவாகிறதென்று பரிக்ஷார்த்தமாக சோதனை செய்யப்பட்டதில் அடியிற் கண்டபடி கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது:—

| | மொத்தம் | வெள்ளி. 100-க்கு | நோட்டு. 100-க்கு | பொன். 100-க்கு |
|---|---|---|---|---|
| வரவு ரூ. | 302,38,409 | 44·12 | 51·91 | 3·97 |
| செலவு ரூ. | 270,43,192 | 42·38 | 53·31 | 4·41 |

இந்தக் கணக்கு மிஸ்டர் ஹன்ட்டருடைய அபிப்பிராயத்தை ஆதரிக்கின்றது. பொன்னி

ற்கு கிராக்கி அற்பமாயிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பொன்னைச் சேர்த்துவைக்கும் சித்தாந்தம் அல்லது ஏற்பாடு அடியோடு போய்விட்டது. ஏன் எனில் ரூ. 12,01,365 பொருமானமுள்ள பொன் வரவு வந்திருக்கும் போது ரூ. 11,65,179 பொன் செலவாயிருக்கிறது.

## Plea for Commercial Education.

## வியாபாரப்படிப்பு தேவை.

—(:-:)—

சென்னை Y. M. C. A. என்று சொல்லும்படியான கிறிஸ்தவர்கள் பாலிய சங்கத்தின் கட்டடத்தில் கூடிய ஓர் கூட்டத்தில் சென்னை ஐக்கோர்ட்டு ஜட்ஜி மிஸ்டர் சங்கர நாயர் அவர்களுடைய அக்கிராசனத்தின் கீழ் ஐக்கோர்ட்டு வக்கில் ஆனரபில் மிஸ்டர் T. V. சேஷகிரி அய்யர் "இந்தியாவில் படிப்பு" என்கிற விஷயத்தைப்பற்றி ஒரு பெரிய உபன்னியாசம் செய்து வரும்போது இந்தியாவில் வியாபாரப்படிப்பிற்கும் கைத்தொழில் படிப்பிற்கும் அவசியமாக ஏற்பாடுகள் செய்யபடவேண்டுமென்று சொல்லி பின்னால் சொல்லியிருக்கிறபடி பொருள் படும்படியாகப் பேசினார்:—

"மதிராஸ் கவர்மென்டார் சம்பந்தப்பட்டவரையில் இந்தக் குறைவை நிரப்ப ஒரு நிச்சயமான பிரயத்தனம் உண்மையில் செய்யப்பட்டது. வியாபாரப் படிப்பைப் போதிக்கும்படியான கலாசாலைகளும் சோதனைத் தொழிற்சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டு அவைகள் மூலமாக ஜனங்களுக்கு போதிக்கப்பட்டால்மட்டிலும் தேசத்தினுடைய தேவை திருப்தி அடையுமென்று இந்தியா காரியதரிசி யாருக்குச் சிபார்சு செய்யப்பட்டது. ஆனால் "கவர்மென்டார் பொது ஜனங்களுடைய வியாபாரத்தில் பிரவேசிக்க மாட்டார்கள், கவர்ன்மென்டார் கைதொழில்களிலும் பிரவேசிக்க மாட்டார்கள்" என்று நீதிவாக்கியங்கள் சொல்லிக் கொண்டிருக்கும் இந்தியா காரியதரிசியார் சென்னை கவர்ன் மெண்டின் ஏற்பாட்டையும் அதனுடன் ஜனங்களுடைய கைத்தொழில் அபிவிருத்தியையும் முளையிலேயே கிள்ளிப்போட்டார். வியாபாரப் படிப்பு கலாசாலைகளில் போதிக்கப் படுவதற்கு காலம் வந்துவிட்டதென்று நான் நினைக்கிறேன். கடந்த 50 வருஷமாகவும் அதற்கு மேலாகவும் கவர்ன்மெண்டார் மாதிரிக்கலாசாலைகளை ஸ்தாபித்து நிர்வாகித்துக் கொண்டு வருகின்றார்கள். ஆதலால் இந்தியர்களும் பாதிரிமார்களும் தாங்களே பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து நிர்வகித்துக் கொண்டு வருகிறார்கள். சதாரண கல்வி சம்பந்தப்பட்ட வரையில் இப்பேர்பட்டவர்களிடம் ஒப்புவிக்கப்படலாம். இப்போது கவர்ன்மெண்டார் இக்கலாசாலைகளை நிர்வகித்து வருவதில் செலவழியும் பணமும் இப்போது உத்தேசத்திலிருக்கும் மாதிரிப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கப்படுவதில் செலவிடப்படக்கூடிய பெருந்தொகையும் வியாபாரக் கலாசாலைகளையும் தொழிற்சாலைகளையும் ஸ்தாபிப்பதில் பிரயோகப்படுத்தப் படவேண்டும். பொது ஜனங்கள் செய்யும்படியான வியாபாரத்துடனும், பொது ஜனங்கள் செய்யும் கைத்தொழில் ஏற்பாடுகளில் சர்க்கார் பிரவேசிக்கக் கூடாதென்று இந்திய காரியதரிசியார் சொல்லிக்கொண்டிருப்பதை நான் ஒரு நிமிஷம் ஆராய்ந்து பார்க்கிறேன். பார்லிமெண்டில் நடந்தேறும் தர்க்கப் பேச்சுகளைக் கவனித்து வந்தால் இப்போது இங்கிலாண்டிற்கு பொக்குஷதாரியாயிருப்பவர் 5 வருஷத்திற்கு முந்தி விவசாயத்திற்கு எதேஷ்டமான பணம் கொடுக்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார். சாகுபடி செய்யப்படாத நிலங்களை சாகுபடி செய்யப்படும் நிலங்களுடன் சேர்ப்பதற்காக ("Development Fund") விருத்தியாம் சநிதி ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டிருக்கிறார். இது கவர்ன்மெடார் பொதுஜனங்கள் செய்யும் விவசாயத்தை ஆதரிப்பதல்லவோ? பருத்திப்பயிர் செய்பவர்கள் பயிர் செய்யும் பொருட்டு கவர்ன்மெண்டார் எதேஷ்டமானபணம் கொடுத்து உதவி புரியவில்லையோ? இது ஒரு தொழிலை ஆதரிப்பதல்லவோ? சில ரயில்வேக்களுக்கு கவர்ன்மெண்டார் உதவிபுரிவது-மற்ற ரயில்வேக்களுடன் போட்டி போடுதலல்லவோ? உண்மை என்னவென்றால் கவர்ன்மெண்டார் மான்ச்சஸ்டார் லங்காஷயர் தொழிலில் கவலையுடையவர்களாக யிருக்கிறார்கள்! இங்கிலாண்டிலிருக்கும் எந்த கவர்ன்மெண்டாரும் மான்சஸ்டர் லங்காஷயருடைய நோக்கங்களுக்கு விரோதமாகச் செய்யமாட்டார்கள். கவர்ன்மெண்டார் சோதனைத் தொழிற்சாலைகள் ஸ்தாபித்து கைத்தொழில் படிப்பை அபிவிருத்தி செய்ய பின்வாங்குவதற்கு இதுதான் காரணம். ஜனங்களுடைய சுக

தாரத்தையும்விருத்திபடுத்தி அவர்கள் சுகமாக ஜீவிக்க வேண்டுமென்றும் செல்வ வந்தார்களாகவு மிருக்க வேண்டுமென்றும் படிப்பும் விஸ்தாரமாகப் பரவ வேண்டுமென்று கவர்ன் மெண்டார் அபிப்பிராயப் பட்டால் எதேஷ்டமான பணம் கவர்ன்மெண்டாருக்குத் தேவையாயிருக்கும் இன்னும் அதிகமாக, நிலவரியை உயர்த்த முடியாது. கைத்தொழில் முதலியவைகளி லிருந்து கவர்ன் மெண்டாருக்கு வருமானம் வந்துதீரவேண்டும். கவர்ன்மெண்டார் நீதிபோதனை செய்வதை விட்டு விட்டு வியாபாரக்கலாசாலைகளையும் சோதனைதொழிற்சாலைகளையும் ஸ்தாபித்து வியாபாரத்தையும் தொழிலையும் விருத்தி படுத்திக் கொண்டு வந்தா லொழிய கடனாளிகளாகப் போய் விடுவார்கள் என்று எச்சரிக்கிறேன்.

இதன் பிறகு சேர்மென் எழுந்திருந்து இது விஷயம் யாதொன்றும் சொல்ல முடியாதவராய் அடியிற் கண்டபடி பேசி மீடிங்கை முடிவிற்குக் கொண்டு வந்தனர். கவர்ன் மெண்டார் லங்காஷயர் மான்ச்சஸ்டர் முதலிய கைத்தொழில் ஸ்தாபனங்களில் பற்றுடைய வர்களாகயிருக்கிறார்கள் என்றும், ஆதலால் பச்சைப் பொருள்களை மட்டிலும் இந்தியா தயார் செய்து இங்கிலாண்டிற்கு அனுப்ப வேண்டுமென்றும்; அவைகள்சாமன்களாக இங்கிலாண்டிற்குதாயார் செய்யப்பட்ட பின்பு இந்தியாவிற்கு அனுப்பப்பட வேண்டுமென்றும் இங்கிலாண்டு கூலிக்காரர்கள் பிழைக்கும் பொருட்டு இந்தியர்கள் அதை வாங்கித் தீரவேண்டுமென்று எண்ணி இந்தியாவில் அவசியமாகச் செய்யப்படவேண்டிய விஷயங்களை செய்யாமலிருக்கிறார்கள் என்று நான் சொல்வேனானல் கவர்ன் மெண்டாருடைய கொள்கைக்கு விரோதமாக தகாததைப்பேசினவனாவேன். கவர்ன் மெண்டாருடைய கொள்கையை அங்கீகரித்துப் பேசினாலோ மீட்டிங்கிற்கு வந்திருப்பவர்கள் நான் சர்க்கார் உத்தியோகத்திலிருப்பதால் அப்படிப்பேசினேன் என்று சொல்லுவார்கள். ஆகையால் இது விஷயத்தில் என்னுடைய அபிப்பிராயம் இன்ன தென்று உங்களுக்குச் சொல்லப் போகிறதில்லை!

——(:o:)——

## Mysore Dewan at Davangere

## தேவன்கரில் மைசூர் திவான்,

——:‡:——

சென்ற ஆகஸ்ட் மீ 12உ தேவன்கர் ஜனங்கள் மைசூர் திவானுக்கு வாசித்த அவர்களுடைய குறைகளடங்கிய அட்டிரசிற்கு திவான் அடியிற்கண்டபடி பதில் சொன்னார்:—

தேவன்கர் வாசிகளுடைய குறைகளையும் தேவைகளையும் ஜல சப்ளை எப்படி யிருக்கிறதென்றும் இன்னும் முனிசிபாலிட்டி சௌகரியங்கள் எப்படி யிருக்கிறதென்றும் விசாரணை செய்ய நாம் இவ்விடம் வந்திருக்கிறோம். எப்படி உங்களுடைய வியாபாரத்தையும் கைத்தொழிலையும் பலப்படுத்தலாமென்று உங்களுடன் கலந்து யோஜனை செய்வதற்காகவும் நாங்கள் இவ்விடம் வந்திருக்கிறோம். நாம் இருதாப்பாரும் கலந்து யோஜனை செய்து கூடுமானல் ஒரு முடிவு செய்வதில் உதவிபுரிய சமஸ்தான முனிசிபல் பரிபாலனத்திற்கு உத்திரவாதியா யிருக்கும் மிஸ்டர் காந்தராஜ் அர்ஸ் அவர்களும் வர்த்தக கைத்தொழில் இலாக்காவிற்கு டைரக்ட்டராயிருக்கும் மிஸ்டர் சாட்டர்ட்டனும் பொருளாதாரக் கான்பரான்சிற்கு செக்ரட்டரியாக விருக்கும் மிஸ்டர் பாலசுந்திரமய்யரும் இவ்விடம் வந்திருக்கிறார்கள். உங்களுடைய நகரத்தை விசாலப்படுத்தி உங்களுடைய வியாபாரத்தை பலப்படுத்தச் செய்யப்படவேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து நாங்கள் ஏற்கனவே கலந்துபேசிக்கொண்டிருக்கிறோம். உங்களுடைய பிரயத்தனங்கள் முன்னுக்கு வர என்ன என்ன உதவிகள் செய்யப்படவேண்டுமோ அவைகளை எல்லாம் செய்யக்கவர்ன்மெண்டார்தயாராயிருக்கிறார்கள் என்பதை நீங்கள் பூர்த்தியாய் நம்ப வேண்டும். என்று சொன்னார். நீங்கள் உங்களுடைய குறைகளை எல்லாம் அட்டிரசில் எடுத்துக் கூறியிருக்கிறீர்கள். அவைகளைப்பற்றி இவ்வளவு சீக்கிரத்தில் நான் யாதொரு தீர்மானமும் சொல்லுவேன் என்று நீங்கள் எதிர்பார்க்க மாட்டீர்கள் என்று நான் நிச்சயமாய் நினைக்கிறேன். நீங்கள் அறிவித்துக் கொண்டிருப்பதெல்லாம் அவைகளுக்கு சம்பந்தப்பட்ட சமஸ்தான இலாக்காவில் விபரமாய் ஆராய்ந்து யோஜனை செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட வேண்டும். உங்களுடைய பட்டணம் முக்கியமா. பஞ்சு மார்க்கட் என்று வழங்கப்பட்டு வருகிறது

உங்கள் நகர ஜனங்கள் தொழில் முயற்சியில் பிற்பட்டவர்களல்ல; உங்களுடைய சொந்த ஊரிலேயே ஏதேஷ்டமாக பருத்தி பயிராகின்றது. உங்களுக்கு நல்ல ரயில்வே வசதிகளுமிருக்கின்றன. உங்களுக்கு இவ்வளவு வசதிகளிருந்தும் நீங்கள் முயற்சியில் பின்வாங்காதவர்களாகவு மிருந்தும் சமீப வருஷங்களில் விருத்தியாம்சம் அடையும்படியான நூதன வழிகளில் செல்லவில்லை.

ஒருபஞ்சு ஆலை ஏற்படுத்த உண்மையில் யாதொரு பிரயத்தனமும் செய்யப்பட்டு வருகிறதாகத் தெரியவில்லை. பருத்திக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கலாமென்றும் அவ்வெண்ணெயிலிருந்து பிண்ணாக்கு கிடைக்குமென்றும் அது கொட்டையைவிட கால்நடைகளுக்கு நல்ல ஆகாரமாக விருக்குமென்பதும் உங்களுத் தெரியாத விஷயமல்ல. அப்படியிருந்தும் நீங்கள் பயிராக்கும் பருத்தி எல்லாம் அப்படியே பச்சையாய் ஏற்றுமதி செய்யப்பட்டுப் போகின்றன. இந்த வசதிகளைக் கொண்டு எவ்வாறு பயன்படலா மென்று ஆழ்ந்து யோஜனை செய்யவேண்டிய பொறுப்பு உங்களுக்குள்ளிருக்கக் கூடிய முதலாளிகளுடையது. சமஸ்தானத்தின் வியாபாரத்தையும் கைத்தொழிலையும் விருத்திபடுத்த என்ன என்ன செய்யப்பட சாத்தியமாகவிருக்கிறதோ அவைகள் எல்லாம் செய்யப்படவேண்டுமென்பது மேன்மைதங்கிய சமஸ்தான கவர்ன்மெண்டின் கொள்கை. வியாபாரம் கைத்தொழில் சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்ல உங்களுக்கு உதவிபுரிந்து வரும்பொருட்டு சமஸ்தானத்திலேயே ஒரு இலாக்கா ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது விஷயங்களில் ஏற்கனவே கீர்த்தி பெற்றிருக்கும் ஒரு ஆபீசர் அவ்விலாக்காவிற்குத் தலைமையாக யிருந்து வருவது நம்முடைய அதிர்ஷ்டமே. சமஸ்தான கவர்ன்மெண்டின் உதவியைப்பெற்ற ஒரு பாங்கும் சமீபத்தில் உற்பத்தியாகப் போகிறது. ஆகையால் லாவாதேவி செய்யும் வசதிகளும் உங்களுக்குக் கொடுக்கப்படும். உங்களில் உண்மையில் யாரொருவர் தொழில்செய்ய எத்தனப்படுகிறாரோ அப்பேர்ப்பட்டவருக்கு யந்திர தளவாடங்கள் வாங்குவதற்காக ரூபாய் பதினாயிரம் வரையிலும் பச்சை பொருள்கள் வாங்குவதற்காகவும் மூலதனத்திற்காகவும் ரூபாய் ஐயாயிரம் வரையிலும் கொடுத்து உதவிபுரியப்படுமென்று உங்களுக்கு அறிவிக்கும்படியாக மேன்மைதங்கிய அரசர் எனக்கு சமாசாரம் அனுப்பியிருக்கின்றனர். இப்பேர்ப்பட்ட உரிமைகளும் சுதந்தரங்களும் சமஸ்தானத்தின் தொழில்களுக்கு உற்சாகம் கொடுக்குமென்று நான் நம்புகின்றேன். ஆனால் ஆகாயத்தில் கோட்டை கட்டும்படியான ஏற்பாடுகளில் கவர்ன்மெண்டார் பணம் செலவிடமாட்டார்கள் என்று உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். வேண்டிய அளவுமுன் யோஜனைசெய்யப்படவும் நல்ல பயனை விளைவிக்கக்கூடியவுமானவும் சாத்தியப்படும்படியானவுமான ஏற்பாடுகளைச் செய்து முடிக்க என்ன வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டுமோ அவைகளை எல்லாம் செய்துகொடுக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டார் எண்ணங்கொண்டவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் கவர்ன்மெண்டாரிடமிருந்து உதவி கேட்பதற்கு முந்தி உங்களுடைய ஏற்பாட்டைப்பற்றி முழுதிலும் ஆராய்ந்து பார்க்கவேண்டுமென்று உங்கள் மனதில் படும்படியாக அடிக்கடி சொல்லுகின்றேன்.

---

## The Madras Electric Tramways.

## மதிராஸ் டிராம்வே கம்பெனி.

மதிராஸ் டிராம்வே கம்பெனியை கார்போரேஷன் வாங்கிக்கொள்வதா யிருந்தால் ஆரம்பமுதல் 21-வருஷங்கள் முடிந்த பின்பு 6-மாத காலத்திற்குள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்றும் இல்லேல் மறு 21-வருடம் சென்று 6-மாத காலத்திற்குள் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று டிராம்வேச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த கம்பெனியைக் கிரையம் பெறும் பிரஸ்னை கடந்த மாதம் 19௳ கூடின கார்போரேஷன் மீட்டிங்கில் ஆலோசனைக்கு வந்தது. இக்கம்பெனியின் மூலதனம் 33-லக்ஷரூபாய். டிராம்வே, கார்போரேஷனுக்குச் சொந்தமாயில்லாத போனபோதிலும் சில அம்சத்தில் அதனுடைய மேர்பார்வையிலும் மானேஜ்மெண்டிலு மிருந்து வருகின்றது. பம்பாய் கார்ப்போரேஷனில் பம்பாய் டிராம்வேயில் எந்தவிதமான பற்றுதலுமுடைத்தா யிருப்பவர் கமிஷனரா யிருக்கக்

கூடாதென்று ஒரு பிரேரேபணை கொண்டுவரப் பட்டு அங்கீகரிக்கப்பட வில்லை. இந்த பிரரே பணையை உத்தேசிக்கு மளவில் நம்முடைய கார் போரேஷன் டிராம்வேயை வாங்க இப்போது தயாராயில்லை என்று தீர்மானித்திருப்பதைக் கேட்க நமக்கு சந்தோஷமாயிருக்கிறது.

———:(‡):———

## A New Oil Mill.

## ஒரு புதிய எண்ணெய் ஆலை.

12-லக்ஷ ரூபாய் மூலதனத்துடன் பம்பா யில் ஒரு எண்ணெய் ஆலை ஸ்தாபிப்பதற்காக மெசர்ஸ் டாட்டா அண்டு சன்ஸ் கம்பெனி யார்கள் ஏற்பாடுசெய்துகொண் டிருக்கிறார்கள். சர் பாசல் பாய் கரிம்பாய், சர்சாசூன்டேவிட், சர் வித்தால்தாஸ் தாமதார் தாக்கர்சி, மிஸ்டர் N. M. கோகல்தாஸ். ஆனரபில் மிஸ்டர் பல் லுபாய் சாமல்தாஸ் ஆகிய இந்த தனவந்தர்கள் போர்டில் டைரக்டர்களா யிருப்பார்கள்.

## Weights and Measures.

## படிகல்லுகளும் படிகளும்.

இந்தியாவில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் படிக்கல்லுகளையும் படிகளையும்பற்றிய பிரஸ்னை யைஆராய்ந்து விசாரணைசெய்யஇந்தியாகவர்ன் மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தி யிருக்கி றார்கள். பம்பாய் சென்டிரல் டிவிஷன் கமிஷ னர் மிஸ்டர் ஆர்தர் ஐ. சி. எஸ்,—பிரசிடெ ண்ட்; சென்னப்பட்டணம் கார்போரேஷனின் பதலி பிரசிடெண்டாக விருக்கும் மிஸ்டர் A. T. G. காம்பல், ஜான்சி கலெக்டர் மிஸ்டர் C. A. சில்ஹெர்ட் ஐ.வி.எஸ், மத்தியமாகாணம் ஆப்காரி கமிஷணர் மிஸ்டர் ரஸ்டாம்ஜி பரி மெஜி ஆகிய இவர்கள் ஷை கமிட்டியின் மெம் பர்கள். படிக்கல்கள் படிகள்—ஆகிய இவைகள் சம்பந்தப்பட்ட பிரஸ்னை புதிதல்ல. இதற்கு முந்தி அடிக்கடி உண்டாயிருக்கிறது. தென் னிந்தியாவில் யுனைடெட் பயிர் சங்கத்தார்கள் எல்லாவர்த்தக ஆலோசனை சபைகளும் சேர் ந்து இந்தப் பிரஸ்னையைப் பற்றி கவனித்து தேசமுழுதிலும் ஒரே நிறையும் அளவும் வழ ங்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டது. திவான்பகதூர் S. R. M. M. ருமசாமி செட்டியார் அவர்கள் சட்ட சபையில் மெம்பராயிருந்து வந்தபோது இந்த விஷயத்தில் பற்றுதலுடையவரா யிருந்துவந் தார். சென்னப்பட்டணம் சம்பந்தப்பட்ட வரையில் இந்தப் பிரஸ்னை பூர்த்தியாய் 1893ல் மதிராஸ் கவர்ன்மெண்டாராலும் ரெவினியூ போர்டாராலும் ஆராயப்பட்டிருக்கிறது. ராஜ தானி முழுமைக்கும் பொருந்தும்படியான ஒரே அளவும் நிறையும் நிர்ணயிப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது· பின் ஒரு சமயம் இதை ப்பற்றி வரைவோம்.

———:O:———

## The Late Sir Adamjee Peerbhoy.

## காலஞ்சென்ற சர் ஆடம்ஜி பீர்பாஹாய்.

சர் ஆடம்ஜி பீர்பாஹாய் என்பவர் பம்பா யில் பிரக்கியாதியுடன் விளங்கிவரும் கனவான் களுள் ஒருவர். போரா முகம்மதிய வகுப்பா ருக்குப் பிரமுகர். இவர் பம்பாயின் மல பார் ஜில்லாவிலிருக்கும் அவருடைய பங்க ளாவில் சென்ற மாதத்தில் 70—வது வய தில் நுரையீரல் நோயால் இம்மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் ஏகினார். இறந்துபோன வர் பிரபலமான பாரி கண்டிராக்ட்டர். அனேக கைத்தொழில் ஸ்தாபனங்களுக்கும் சொந்தக்காரர். இவையன்றி இவருக்கு ஒரு கூடாரத் தொழிற்சாலையும், தோல் தொ ழிற்சாலையுமிருக்கின்றன. மாதரான் லயிட் ரெயில்வேக்கும் மானேஜிங் ஏஜண்டாயிருந்

தார். இவர் மானிட அபிமானி. இயல்பாய் தயாளகுணமுடையவர். தரும விஷயங்களில் 50 லக்ஷ ரூபாய் செலவிட்டிருக்கின்றனர். ஆவிகாரா கலாசாலையுடன் சேர்ந்திருக்கும் சயன்ஸ் பள்ளிக்கூடம் இந்தக் கொடை வள்ளலால் ஏற்படுத்தப்பட்டது. இவர் பம்பாய்க்கு ஷெரிபாயிருந்ததுமன்றி கவர்ன்மெண்டாராலும் நன்கு மதிக்கப்பட்டு "நயிட்" என்னும் கவுரவப்பட்டம் 1907ல் சூட்டப்பட்டு கீர்த்திப் பிரகாசம் எங்கும் ஜொலிக்கும்படியாய் வாழ்ந்து வந்தனர். பிதாவின் பெயரையும் புகழையும் பலப்படுத்தும் 6 புத்திரர்களுமிருக்கிறார்கள்.

## The Consumption of Bananas.

### வாழைப்பழம்.

இவ்வுலகத்தில் பனை வாழைப்பழம் எங்கெந்த தேசத்தில் உற்பத்தியாகின்றன வென்றும் எங்கெந்தவூரில் எவ்வளவு எவ்வளவு செலவாகின்றனவென்றும் "சென்னைவியாபாரியில்" முன்னொரு சஞ்சிகையில் எடுத்து எழுதியிருந்ததை நம் நேயர்கள் வாசித்திருப்பார்கள் என்று எண்ணுகின்றோம். ஆயினும் இந்த வியாசத்தில் பனை அமெரிக்கா தேசத்தில் எவ்வளவு செலவாகிறதென்று கவனிப்பாம். சுமார் ஒரு ஆண்டிற்கு முந்தி போஸ்டன் நகரைச் சேர்ந்த L. D. போஸ்டன் என்பவர் ஜமெய்க்காவிற்கு வந்து திரும்பிப் போகும்போது சில குலைகளை தம்முடன் எடுத்துக்கொண்டு போனார். அப்படிச் சொல்லுவதால் பனை வாழைப்பழத்தை யுனைடெட் ஸ்டேஸ் ஜனங்கள் இதற்கு முந்தி அறியமாட்டார்கள் என்று சொல்லக்கூடாது. ஏன்எனில் அதற்கு முன் பேக்கர் என்பவர் அப்பழத்தை அத் தேசத்திற்குக் கொண்டுபோயிருக்கிறார். ஆனால் மேலே சொல்லப்பட்ட போஸ்டன் கொண்டு போன காலத்திற்குப் பிந்திதான் அவ்வூரில் வாழைப்பழம் வியாபாரம் பலமாய் நடந்துவருகிறது. உலக முழுதிலும் 9,000,000 குலைகள் செலவாகும்போது யுனைடெட்ஸ் ஸ்டேட்சில் மட்டிலும் 44,000,000 குலைகள் அழிவடையாகின்றனவென்றால் இவ்வாழைப்பழத்தை எவ்வளவு பிரியத்துடன் வாங்கிச் சாப்பிட்டு வருகிறார்கள் என்று நாம் சொல்லவும் வேண்டுமோ? 12 வருஷங்களுக்கு முந்தி யுனைடெட் ஸ்டேட்ஸில் 6,000,000 டால்கர்களுக்குக் குறைவாக இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால் இப்போதோ 14,000,000 டாலர்கள் மதிப்புள்ள வாழைப்பழங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. இன்னொருவிதமாய்ச் சொன்னால் 40 வருடங்களுக்கு முந்தி பனை வாழைப்பழத்தை யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஜனங்கள் சாப்பிட்டதில்லை. ஆனால் இப்போது வருஷத்திற்கு 6 லக்ஷகோடி வாழைப்பழம் சாப்பிட்டு வருகிறார்கள். இத்தேசத்தில் இவ்வாழைப்பழம் இன்னும் போகப்போக அதிகமாக அழிவடையுமேயொழிய அழிவு குறைந்துபோகமாட்டாது. எவ்வளவிற்கு எவ்வளவு கிராக்கி அதிகப்படுகிறதோ அதற்குத் தக்கபடி உற்பத்தியும் அதிகரிக்குமென்று உறுதியாய் நம்பப்படுகின்றது. ஜமேய்க்கா (Jamaica) தேசம் இப்போது எவ்வளவு ஏற்றுமதி செய்கிறதோ அதைவிட அதிகமாய் ஏற்றுமதிசெய்ய சாகுபடி செய்வதுடன்கூட மெக்சிகோ மத்திய அமெரிக்கா கொலம்பியா ஆகிய உஷ்ணதேசங்களிலும் இவ்வளவு பயிர் செய்யப்படுகின்றன. ஆகையால் தேவைக்குத் தகுந்தபடி உற்பத்தியில்லாமல் போய்விடுமென்று அஞ்சவேண்டியதில்லை, பனை வாழைப்பழத்தையே ஆகாரத்திற்குப் பதிலாக பிரயோகப் படுத்த வேண்டுமென்று ஒரு யோஜனை உண்டாயிருக்கிறது. அது உண்மையாய் சிற்றுண்டிகளில் ஒன்று. இப்பழம் யுனைட்டெட் ஸ்டேட்சில் சிற்றுண்டியாக உபயோகப்பட்டு வருகிறதேயொழிய அவசிய

மான ஆகாரமாக எண்ணப்படவில்லை. ஆயினும் ஜனங்கள் அதை மிகவும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அவசியமான ஆகாரத்திற்கு ருசியும் நல்ல வாசனையும் உண்டுபண்ணும் பொருட்டு இப்பழம் கலக்கப்படுகிறது. இதன் விலை நயமாயிருப்பதை முன்னிட்டு ஏழைஜனங்களும் வாங்கிச் சாப்பிடுகிறார்கள். (பனானா என்றால் ஓர்வகை வாழைப்பழம்.)

——:(*):——

## Trade Notes.

## வியாபாரக் குறிப்புகள்.

திருநல்வேலி ஜில்லாவில் ஒவாரி கடல்கரை ஓரத்திற்கு சமீபத்திலிருக்கும் நோவாலேடி என்னு மிடத்தில் செம்பு மண்குவியல் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கண்டு பிடித்தவர் மிஸ்டர் கேஷட் ஸ்ரீ கிருஷ்ணதாஸ். இவர் இப்போது கன்னியா குமரி முனையிலிருக்கிறார்.

——(:o:)——

## The Indo-Burma Match Factories.

## இந்தியா பர்மா நெருப்புப் பெட்டி தொழிற் சாலைகள்

இந்த பெயர்உள்ள ஒரு தொழிற்சாலை ஸ்தாபிக்கப்படப்போகிறது பங்கு ஒன்றுக்கு ஒரு பவுன் வீதம் 30 ஆயிரம் பங்குகளாகப் பிரிவினை செய்யப்பட்டிருக்கிறதென்று விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இந்தியா பர்மாவிலிருக்கும் மானேஜிங் டைரக்டர் லோகல் கவர்ன்மெண்டாரைப் போய்க்கண்டதில் மரம்வெட்டிக் கொள்ளும்படியான சுதந்தரமும்காட்டுஇலாகா உத்தியோகஸ்தர்களின் உதவியையும் கொடுத்து சகாயப் செய்வதாய் வாக்களித்திருக்கிறார்கள். இத்தொழிற்சாலை முதலில் ரெங்கூனுக்கு சமீபத்தில் ஸ்தாபிக்கப்படும் யந்திர தளவாடங்களுக்கு 7200 பவுன் மதிப்பு போடப்பட்டிருக்கிறது. இந்தியாவிலும் பர்மாவிலும் இது சம்பந்தமான தொழிலை நடத்த ஒரு கமிட்டியும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

———

Royal Arms and Prince of Wales Feathers Royal arm என்கிற அரசாங்க நன்கு மதிப்பு அடையாளங்களை வர்த்தக கம்பெனியார் தகாதபடி பிரயோகப்படுத்தி வருவதை மதிராஸ் போலீஸ் கமிஷனரும் ஜில்லா மாஜிஸ்டிரேட்டும் கூடியமட்டில் மட்டுப்படுத்திக் கொண்டு வரும்படி ஒரு கவர்ன் மெண்டு உத்திரவு பிறந்திருக்கிறது. தகுந்த வேலைப்பாடு அமைந்த சமான்களைச் செய்யும் அல்லது சப்ளை செய்யும் வர்த்தக அவுஸ்களுக்குத்தான் அந்தச் சின்னங்கள் கொடுக்கப்பட்டிக்கின்றன என்பது அவர்களுக்கு அறிவிக்கப்படவேண்டும்.

——(:*:)——

## FINANCE COMMISSION.

## நாணயக் கமிஷன்.

இங்கிலாண்டில் இப்போது கூடியிருக்கும் நாணயக்கமிஷன் செய்து வரும் விசாரணை காலம் அடுத்த அக்டோபர் மீ 23 உக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. இது வரையில் வாங்கியிருக்கும் வாக்குமூலங்கள் எல்லாம் அந்தத் தேதிக்குள் அச்சடிக்கப்பட்டு பயிரங்கப் படுத்தப்படும் மேலே கண்ட வாயுதா காலத்தில் கமிஷன் மறுபடியும் விசாரணை ஆரம்பிக்கும் போது சர்ஜேம்ஸ் வெஸ்டனும், சர் பினிட்வுட் வில்சனும், மிஸ்டர் லயனல் அபிரகாமும் சாட்சியம் சொல்லுவார்கள்.

———

## ABUNDANT HOT WATER.

## ஏதேஷ்டமான வெந்நீர்.

மிச் (Mich) கலமர்ஜோ, ரோஸ் தெரு 715-ம் நெ விட்டிலிருக்கும் ஹம்பெரி கம்பெனியார். சுடுஜலம் சப்ளை செய்யும்படியான உபாயமுள்ள யந்திரம் ஒன்று கண்டுபிடித்து தயார் செய்திருக்கிறார்கள். அதற்குப் பெயர் ஹம்பரிபாத் கேய்சசர் (Humphery Bath Geyser) சுடு ஜலம் தேவையானால் நெருப்புக் குச்சியை கிழித்து காஸ் விளக்கை எறிய விடவேண்டியதுதான்; 7 விநாடிக்குள் தயாராய் விடுகிறதாம். குளிர் தேசங்களில் இந்த சாமான் மிகவும் உபயோகமுள்ளதா யிருக்கும்.

———

## A CONFERENCE.

## உலகப் போக்கு வரத்து கான்பரன்ஸ்.

உலக முழுதிலுக்கும் போக்கு வரத்து செய்வதைப்பற்றி கவனிக்கும் ஒரு கான்பரன்ஸ் ருஷியாவிலிருக்கும் மாஸ்கோ நகரில் கூடினது; ஜனங்கள் உலக முழுதிலும் பிரயாணம் செய்யும் படியாக சைபீரியா

கனடா வழியாக அடியிற்கண்ட ரயில் கப்பெனிகளைச் சேர்த்து விடுகிறதென்று ஒரு தீர்மானம் செய்யப்பட்டது:—

ஆஸ்டிரியன் சவுத்ரயில்வே, ஆன்டான் கபூசன் சோசன் ரயில்வே, பூசன் சிம்மன சோக்கி ரயில்வே, நார்த் ரிசன் ரயில்வே. அந்த மார்கத்துடன் அடியிற் கண்ட ஸ்டீமர் கம்பெனிகளையும் சேர்க்க வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. குனார்ட், ஹாம்பர்க் அம்பர்க் அமெரிக்கா, பசிபிக் மேயில் கம்பேனி, டோக்கியோ கிஷன்கோய்சா, கர்கா வழியாக ஜப்பான் ரயில்வேக்கள். ஆஸ்டிரேலியா மப்ர்க்கமும்.

## The Bengal Technological Institute.

### வங்காளத்தில் கைத்தொழிற் சாலை.

வங்காளத்தில் கைத்தொழில் சாலை சம்பந்தமான பிரஸ்னைகளைப்பற்றிக் கவனித்து ரிப்போர்ட் செய்ய 1912-ம் வருஷத்தில் வங்காள கவர்ன்மெண்டார் ஒரு கமிட்டி ஏற்படுத்தினார்கள். இக்கமிட்டியார் கைத்தொழில் சாலை ஒன்று கல்கத்தாவில் ஸ்தாபிக்க வேண்டுமென்று சிபார்சு செய்திருக்கிறார்கள். இச்சாலை விஷயமாக விபரமாகக் கவனித்து ஒரு ஏற்பாடு செய்து ஸ்தாபிக்க நிபுணர்களடங்கிய இன்னொரு கமிட்டி நியமிக்கப்பட்டது. பின்னால் சொல்லப்பட்ட கமிட்டியார் அனுப்பியிருக்கும் ரிப்போர்ட் பயிரங்கப் படுத்தப்பட்டிருக்கிறது. அத்தொழிற்சாலையில் இன்ஜுனீரிங் வேலை, பின்னல், நெசவு வேலை, ரசாயன வேலைகள், அச்சடிக்கும் வேலைகள், வியாபாரத்தொழில், ஸ்திரீகளுக்கு ஆடை தயார்செய்தல் ஆகிய இவைகள் எல்லாம் கற்பித்துக் கொடுக்கப்படுமாம். கல்கத்தா பழைய கவர்ன்மெண்டு அவுசிற்கு மேல்புரத்திலிருக்கும் இம்பீரியல் செக்ரேட்டேரியட் கட்டடம் இச்சாலைக்கு கொடுக்கப்படும்படியாக இந்தியா கவர்ன்மெண்டார் ஆலோசனை செய்துகொண்டிருக்கிறார்கள்.

## Heat and cold Retaining bottle.

### உஷ்ணத்திற்கும் குளிர்ச்சிக்கும் இலக்காகாத குப்பி,

ஒரியோ சின்சினட்டி மேல்இரண்டாவது வீதி 131-ம் நெம்பர் வீட்டில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அய்சிஹாட் பாட்டில் கம்பெனியார் சூட்டையும் குளிர்ச்சியையும் வெளிவிடக்கூடாத பாட்டில்கள் தயார்செய்து விற்பனை செய்கிறார்கள். அது இலகுவில் உடைந்து போகாதாம். ஏன் எனில் குப்பியின் கழுத்தில் ரப்பர் வேலையும் அடியில் கம்பி வேலையும் செய்யப்பட்டிருக்கிறதாம். வெந்நீர் அந்த குப்பியில் வைத்திருந்தால் 24 மணி நேரம்வரையில் சூடான நிலைமையிலேயே யிருக்குமாம். குளிர்ச்சியான ஜலம் அதில் போட்டுவைத்தால் மூன்றுதினங்கள் அப்படியே யிருக்கிறதாம். இந்த இரண்டுவகையிலும் நெருப்பாவது பனிக்கட்டியாவது அல்லது எந்த ரஸாயன வஸ்துக்களாவது உபயோகப் படுத்துகிறதில்லை. இது பிரயாணிகளுக்கும் இரவில் குழந்தைகளுக்கும் பால் ஊத்தி வைக்கவும் மிகப் பிரயோஜனமாயிருக்குமென்று சொல்லப்படுகிறது.

## The Sitaram Mills, Limited.

### சீதாராம் ஆலைகள் லிமிட்டெட்.

கொச்சின் திவானாகவிருக்கும் மிஸ்டர் A. R. பனர்ஜி ஐ. சி. எஸ். சீத்தாராம் நெசுவு ஆலைகளைப் போய் பார்வையிட்டார். கம்பேனியின் டைரக்டராகவிருக்கும் மிஸ்டர் பி. ஏ. ஸ்டீபனும் காரியஸ்தராயிருக்கும் T. S. பலராம அய்யரும் எதிர்கொண்டு அழைத்து மரியாதை செய்து ஆலைகள் முழுவதும் சுற்றிக்காட்டினார்கள். திவான் எல்லாரையும் பார்த்து சந்தோஷப்பட்டார். ஆலைகள் மிக

வும் விரைவில் விருத்தி அடைந்திருக்கின்றன என்றும் சந்தோஷமடைந்தார். உயர்ந்த சூத்திர ஜாதியைச் சேர்ந்த ஏழைப் பெண்கள் ஆலையில் சேர்ந்து கைப்பாடுபட்டு மானமாய்க் காலம் கழித்து வருவதைப் பார்ப்பது மனதிற்கு மிகவும் சந்தோஷகரமாயிருக்கிறதென்று சொன்னார். புஷங்கினியில் ரயில்வே வசதிகள் இல்லாததால் ஆலைகள் அதிகப்படியான வேலைகள் செய்ய முடியவில்லை என்றும், ரயில்வே வசதிகள் கொடுக்கப்பட்டால் இன்னும் அனேக தரிகள் சேர்க்கப்பட்டு, அதிகப்படியான சரக்குகள் தயார் செய்யப்படுமென்றும் செக்ரெட்டரி தெரிவித்துக் கொண்டனர். இந்தப் பிரரேபனை தர்பாரால் கவனிக்கப்படுமென்றும் இந்த ஆலைகளுக்கு தர்பார் இன்னொருமுறை கடன் கொடுத்து உதவினால் பாக்கி தொகையை பங்குகளை விற்று சேகரிக்கலாமென்றும் ஆனால் இப்படி உதவி செய்யலாமா என்று தர்பார் யோஜனை செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

## Indian Bank Limited.
## இந்தியன் பாங்க்.

நிகழும் 1913ம் வருடம் ஜூன்மீ 30உ யுடன் முடிவாகும் அரை வருடத்திற்கு இந்தியன் பாங்கிற்கு ரூ. 80,021-4-0 அசல் லாபம் தேறியிருக்கிறது. இந்த வருஷ கணக்கிற்குக் கொண்டுவரப்பட்ட முந்திய வருஷம் கையிருப்பு ரூ. 7,679-3-0 ஆக ரூ. 87,700-6-3 அடியிற்கண்டபடி வினியோகப்படுத்தப் பட்டிருக்கிறது. வருஷத்திற்கு 100க்கு 6 மேணிக்கி பங்குதாரிகளுக்கு இனும் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 35,000; நடமுதல் பாதிவருஷக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்ட தொகை ரூ. 57,7000-6-3 ஆதலால் பாங்கித்தொழில் சிலாக்கியமாக நடைபெற்றிருக்கிற தென்று சந்தோஷப்படவேண்டும்

## The Madras Glass Works Limited
## சென்னப்பட்டணம் கண்ணாடி வேலைகள் லிமிட்டெட்.

இந்த கம்பெனியின் பங்குதார்கள் சென்ற ஜூலைமீ 18உ வெள்ளிக்கிழமை கூடின மீட்டிங்கில், கம்பெனி கடனுக்கு இலக்காயிருப்பதை முன்னிட்டு அதை நடத்த முடியாதென்றும் ஆகையால் முடிவிற்குக் கொண்டு வந்து விடவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

சர்ட்டிபிக்கேட் பெற்றிருக்கும் அக்கவுன்டண்டாகிய மிஸ்டர் எ. எஸ். சாலன்சன் கம்பெனியை முடிவிற்கு கொண்டுவருவதற்காக லிக்வியுடேட்டராக நியமிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானம் செய்யப்பட்டது.

—(:-:)—

கொச்சி சமஸ்தான 5 வது வருடத்திய பொருட்காக்ஷி நிகழ் செப்டம்பர் மீ 24 உ முதல் ஆரம்பமாகி அக்டோபர் மீ 4 உ சனிக்கிழமையுடன் முடிவடையும். இந்தக்காக்ஷிகள் நடத்தப்படுவதில் சமஸ்தானத்தாரின் நோக்கம் என்ன வென்றால் விவசாயப் பொருள்கள் கைத்தொழில் பொருள்கள், யந்திரங்களும் அவைகளின் உபயோகங்களும் ரயத்துகளுக்கும், மற்றுமுள்ள தொழிலாளிகளுக்கு பிரத்தியக்ஷமாக காண்பிக்க வேண்டு மென்பதே. கைத்தொழில் விஷயமாகவும், விவசாய விஷயமாகவும், விருத்திசெய்யப்பட்ட ஆயுத சாமான்கள் விஷயமாகவும், கால் நடை வளர்க்கும் விஷயமாகவும், மலையாள பாஷையிலும், ஆங்கிலத்திலும் படிப்படைந்த நிபுணர்கள் உபந்நியாசம் செய்வார்கள்.

## MYSORE—HASSAN RAILWAY.
## மைசூர் ஹாசான் ரயில்வே.

தலையில் காணப்பட்ட இந்த விரண்டு விடங்களையும் இருப்புப் பாதையால் புணைப்பதற்கு யோஜனை செய்யப்பட்டு 48 லக்ஷ ரூபா செலவு திட்டம் போடப்பட்டு கவர்ன்மெண்டாருடைய ஆலோசனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இரண்டு ஸ்டேஷனுக்கு மத்தியில் 75 மைல்களிருக்கின்றன. மூன்று பாலங்களிருக்கின்றன. லக்ஷ்மண தீர்த்தத்தின்பேரில் பாலம் கட்டுவதற்கு மட்டிலும் 3 லக்ஷ ரூபாய் பிடிக்குமாம். காவேரி, ஹிமாவதி நதிகளின் மேலே பாலங்கள்போட முறையே 4, $2\frac{1}{2}$லக்ஷம் பிடிக்குமாம். மற்றப்படி ரயில் மார்க்கத்தில் துளைத்து இடிக்கும்படியான மலை கிடையாதாம்; சமபூமியா யிருக்கிறது. காவேரியும் ஹிமாவதியும் பாயும்படியான பிராந்தியங்களில் இந்த ரயில்மார்க்கம் போகிறபடியாலும் காபியும் தேக்கும் பயிராகும் ஸ்தலமாயுமிருப்பதாலும் ரயில் கம்பெனியாருக்கு தகுந்த லாபம் கிடைக்கும்.

—:(*):—

## MOTOR CARS IN INDIA.
## இந்தியாவில் மோட்டார் வண்டிகள்.

—:*:—

பிரிடிஷ் இந்தியாவிலும் சுதேச சமஸ்தானங்களிலும் உபயோகப் படுத்தப்பட்டுவரும் மோட்டார் வண்டிகளின் கணக்கு விபரம் ''இந்தியன் டிரேட் ஜர்னல்'' என்கிற பத்திரிகையில் பின் வருமாறு பிரசுரமாயிருக்கிறது. வங்காளத்தில்தான் அதிகப்படியான மோட்டார் வண்டிகளிருக்கின்றன. அதாவது 1940; அவற்றுள் 1819 கல்கத்தாவிலிருக்கின்றன. அதற்கு அடுத்தபடி பம்பாய் ராஜதானி 1935; அவற்றுள் 1550 பம்பாயிலிருக்கின்றன. நம்முடைய ராஜதானியில் 668. சென்னபட்டணத்தில் மட்டிலும் 504; பர்மாவில் 454; ஆக்ரா அயோத்தியாவில் 410; பிகாரில் 244, ஒரிசாவில் 116. அசாம் 149, ருஜபுதனம் 113. ஆகவே பிரிடிஷ் இந்தியாவிலும் சுதேச சமஸ்தானமாக எல்லாம் சேர்த்து மொத்தத்தில் 6133 மோட்டார் வண்டிகளிருக்கின்றன. நம் தேசமிருக்கும் விஸ்தீரணத்திற்கும் மோட்டார் வண்டிகளை உபயோகப்படுத்த லாயக்குடையவர்கள் எதேஷ்டமாக விருப்பதற்கும் 6133 வண்டிகள் தானிருப்பது மிக சாமனியம்.

---

## THE COCHIN HARBOUR SCHEME.
## கொச்சி துறைமுக ஏற்பாடு.

—:(*):—

கொச்சியில் ஒரு துறைமுகம் கட்டப்பட வேண்டுமென்று சோதனைகள் செய்யப்பட்டன. இதுவரையில் நடந்திருக்கும் வேலைகளைக் கொண்டு துறைமுகம் கட்ட வசதிகளிருக்கின்றன வென்று அறிகிறோம். ஏற்கனவே, கட்டடம் கட்டப்போகும் ஸ்தலத்தில் 6 துளைகள் போட்டு அடி பூமியில் கற்பாரை யிருக்கிறதா என்று சோதனை செய்ததில் யில்லையென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது, மண் எடுக்கும் யந்திரம்தூத்துக்குடியிலிருந்து வரப்போகிறதாம். அதனால் மண் எடுக்கப்போகிறார்கள்; மறுபடி மண் அடருமானால் ஐரோப்பாவிலிருந்து இரண்டு பலமான யந்திரங்கள் தருவிக்கப் படுமாம். கலெக்டரும் வர்த்தகர்களும் கூடிக் கலந்துபேசிய மீட்டிங்கில் துறைமுகம் ஒன்றிருந்தால்தங்களுடையவியாபாரத்திற்கு வசதியாகவிருக்குமென்று கலெக்டருக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்றுமதி இறக்குமதித் தீர்வைகளை வசூல் செய்ய இரண்டு ஐரோப்பியர்களும் இரண்டு இந்தியர்களும், இரண்டு உத்தியோகஸ்தரும் அடங்கிய ஒரு கமிட்டி ஏற்பாடும் செய்யும்படியும் தீர்மானிக்கப்பட்டது.

# COMMERCIAL CASES IN COURT.

## வியாபார சம்பந்தமான கேஸ்கள்.

### ALLEGED CHEATING.

### ஒரு ஏமாற்றின கேஸ்.

———:‡:———

ஆர்ணி ஜாகிர்தாரை ஏமாற்றினதாக குற்றம் சாட்டப்பட்ட மிஸ்டர் H.De. காவில்பர்க்ளன் பவருடைய கேஸ் எழும்பூர் போலீஸ் கோர்ட்டில் சீப் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் முன்னில் சென்ற ஆகஸ்ட் மீ 11உ விசாரணைக்கு வந்தது. பிராஸிகியூஷன் தரப்பிற்கு பிராசிக் கியூட்டிங் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் D. பத்மநாப நாயுடுவும் கிரிமினல் இன்டெலிஜென்ஸ் டிபார்டுமெண்டு இன்ஸ்பெக்டர் மிஸ்டர் காசிம் ஆலியும் ஆஜரானார்கள். இந்தக் கேஸ் சம்பந்தமாக சில ரிக்கார்டுகள் லண்டனிலிருந்து வரவேண்டியதாயிருப்பதால் கேசின் விசாரணையை இரண்டு வாரம் தள்ளி வைக்க வேண்டு மென்று தெரிவித்துக் கொண்டார்கள். குற்றவாளி பேரில் இரண்டு கேஸ்கள் சம்பந்தப்பட்ட வரையில் சார்ஜ ஷீட்டுகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும், அவைகள் இப்போது தாக்கல் செய்யப்படுமென்றுஞ் சொன்னார்கள்.

குற்றவாளி தான் இதுவரையில் 75 நாள் ரிமாண்டு ஜெயிலிலிருந்திருப்பதாகவும் தன்னுடைய தேகமுழுதிலும் சொரியாக விருப்பதாலும் தான் அதனால் சாப்பிடமுடியவில்லை என்றும், ஆகவே கேசின் விசாரணையைத் தள்ளி வைக்கக் கூடாதென்றும் சொன்னார்.

மாஜிஸ்டிரேட் உத்திரவு:—அவசியமான ரிக்கார்டுகள் லண்டனிலிருந்து வரவேண்டியதாயிருப்பதை முன்னிட்டு கேசின் விசாரணை சென்றஆகஸ்ட்மீ 25உக்குத் தள்ளிவைக்கப்பட்டது.

குற்றவாளி தன்பேரில் கொண்டு வரப்பட்ட இரண்டுகேசின் விபரமென்னவென்று கேட்க, ஒரு கேசில் ஆர்ணிஜாகிர்தாரை ரூ. 6000 க்கு 19-6-1912 முதல் 4-2-1913 வரையில் ஏமாற்றினதாகவும், 1-6-1913 முதல் 27-6-1913 வரையில் மாஜி ஐக்கோர்ட்டு ஜட்ஜி சர் S. சுப்பிரமணிய அய்யர் அவர்களுடைய பேரப்பிள்ளை மிஸ்டர் சங்கர அய்யரை ரூ. 2000க்கு ஏமாற்றினதாக ஆக இரண்டுகேஸ்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றனவென்று மாஜிஸ்டிரேட் சொன்னார். (இப்போது இக்கேஸ் விசாரணையாகிவருகிறது. அடுத்த சஞ்சிகையில் காண்க.)—E.D.)

———(:o:)———

### MADRAS HIGH COURT.

### சென்னை ஐகோர்ட்.

ஜட்ஜிகள்:—சிப் ஜஸ்டிஸ்.

மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாப்ஜி.

#### மலையாளம் வாள் ஆலைக் கேஸ்.

கேசின் விபரம்:—மலையாளம் வாள்ஆலையை முடிவிற்கு கொண்டு வரும்பொருட்டு மெசர்ஸ் லவ்லாக் லூயி என்னும் கம்பெனியார் ஆடிட்டர்களாக நியமிக்கப்பட்டிருந்தார்கள். இந்த ஆலை சம்பந்தமான ஒரு கேசில் மெசர்ஸ் லவ்லாக் அண்டு லூயிஸ் என்கிற ஆடிட்டர்கள் பிரஸ்தாப ஆலைக் கம்பெனியைச் சேர்ந்த ஆபிசர்கள் என்று மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வெல் தீர்மானித்தார். இந்த தீர்மானத்திற்கு விரோதமாக அப்பீல் செய்து கொண்டதில் அப்பீல் கோர்ட்டாரும் உறுதி செய்து விட்டார்கள். ஆதலால் பிரிவி கவுன்சிலுக்கு அப்பில் செய்து கொள்ள அனுமதி கொடுக்க வேண்டுமென்று மெசர்ஸ் லவ்லாக் அண்டு லூயிஸ்என்கிற கணக்கு பரிசோதகர்கள் மனுசெய்து கொண்டார்கள்.

**லாயர்கள்.**—மனுதார்களுக்கு மெசர்ஸ்கிங் அண்டுபொட்ரிட்ஜ் உடன் பாரிஸ்டர் மிஸ்டர் பார்ட்டன் மனுதார்கள் தரப்பிற்கு ஆஜரானார்கள். அபிஷியல் லிக்குவிடேட்டர் தரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் C. சிட்னி சிமித் ஆஜராகி மனுவை ஆக்ஷேபித்தார்.

**உத்திரவு:**—அனுமதி கொடுக்கப்பட்டது. இதன்பேரில் இந்தக்கேசு சம்பந்தமான எல்லா நடவடிக்கைகளையும் நிறுத்தி வைக்கும்படி பாரிஸ்டர் மிஸ்டர் பார்ட்டன் மனுசெய்து கொள்ள, பிரிவிகவுன்சிலில் அப்பில் தாக்கல் செய்து நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கும் பொருட்டு பிரிவி கவுன்சிலிடமிருந்து உத்திரவு பெறும் வரையில் எல்லா நடவடிக்கைகளையும் மூன்றுமாதம் வரையில் நிறுத்தி வைக்கும்படி கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்.

---

ஜட்ஜிகள் :—சீப் ஜஸ்டிஸ்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஏய்லிங்.
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்.

### ஒரு ஏஜண்டு எழுதிக்கொடுத்த பிராமசரிநோட்டு.

**கேசின் விபரம்:**—மதுரை டி. மு. கோர்ட்டில் தாக்கலான ஒரு வியாஜ்ஜியத்தில் ஒரு ஏஜண்டு ஒரு பிரமசாரி நோட்டு எழுதிக் கொடுத்தான். பிராமசரி நோட்டு உடலில் ஏஜண்டு என்று சொல்லப்பட்டிருந்தது. ஆனால் கையெழுத்து போடும்விடத்தில் அவன் கையெழுத்து மட்டிலும் போடப்பட்டிருந்ததே யொழிய அவன் இன்னவனுடைய ஏஜண்டு என்று எழுதப்படவில்லை.

**டி. மு. கோர்ட்டார் தீர்ப்பு:**—கையெழுத்து போடும் விடத்தில் கையெழுத்து போட்டவன், தான் இன்னாருடைய ஏஜண்டு என்று எழுதியிராததால் நோட்டின் தொகைக்கு கட்டுப்படவேண்டுமென்று அவன் பேரில் டிக்கிரி கொடுத்தார்கள்.

**ஜில்லாக் கோர்ட்டார் தீர்ப்பு:**— டி. மு. கோர்ட்டார் தீர்மானத்தை உறுதிப் படுத்தினார்கள்.

**இரண்டாவது அப்பீல் கோர்ட்டார் தீர்ப்பு:**—இரண்டாவது அப்பீலை மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்திரமய்யரும் மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யரும் விசாரணை செய்தார்கள். பேதப்பட்ட அபிப்பிராயம் கொண்டார்கள். மிஸ்டர் ஜஸ்டிஸ் சுந்திரமய்யர் பிராமசரி நோட்டின் உடலில் விபரம் சொல்லப்பட்டிருப்பது போதுமானதென்றும், ஆதலால் பிரதிவாதி நேரே ஜவாப்புதாரியாக மாட்டான் என்றும் ஆதலால் அவன்பேரில் டிக்கிரி கொடுக்கப்படக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டார். மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் கையெழுத்து போட்டிருக்கும் விடத்திலும் ஏஜண்டு என்கிற விபரம் போடப்பட்டிருந்தாலொழிய பிரதிவாதி தொகைக்கு நேரே கட்டுப்பட்டவன் என்று அபிப்பிராயப்பட்டார்.

ஆகவே லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பில் செய்து கொள்ளப்பட்டது.

**ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:**—மிஸ்டர் ஜஸ்டிஸ் சதாசிவய்யர் தீர்ப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு லெட்டர்ஸ் பேட்டன்ட் அப்பீல் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

---

ஜட்ஜிகள்—சீப்ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்.

### ஒரு பிராமிசரி நோட் வியாஜ்ஜியம்.

**கேசின் விபரம்**—இந்தக்கேசின் வாதி மைசூர் சமஸ்தானத்தில் சாஸ்வதமாகவசித்து வருகிறார். பிரதிவாதிகளும் மேற்படி சமஸ்தானத்தில் குடியேறி வசித்து வருகிறவர்கள். பிரதிவாதிகளின் தகப்பனார் வாதிக்கு ரூபா 10 ஆயி

ரத்திற்கு ஒரு பிராமிசரி நோட்டும், ரூபா 9 ஆயிரத்திற்கு மற்றொரு பிராமிசரி நோட்டும் ஆக இரண்டு பிராமிசரி நோட்டுகள் எழுதிக் கொடுத்திருந்தார். பிரதிவாதிகள் சென்னைப் பட்டணத்தில் படித்துக்கொண் டிருக்கிறபடியால் வியாஜ்ஜியம் சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டு அசல் தரப்பில் கொண்டுவரப்பட்டது.

**கேசின் நடவடிக்கை:**—அசல் தரப்பு கோர்ட்டில் ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் இந்தக்கேசை விசாரணை செய்தார். தாவா பிராமிசரி நோட்டுகள் பலவிடங்களில் கிழிந்திருந்ததுமன்றி "அல்லது தங்களுடைய உத்திரவு பெற்றிருக்கிறவர்க்காவது" என்கிற விடத்தில் அடியோடு வேணுமென்று கிழிக்கப்பட்டிருந்தது. பிராமிசரி நோட்டுகள் பாண்டாக எண்ணப்பட வேண்டுமென்கிற கருத்துடன் அப்படி கிழிக்கப்பட்டிருக்கின்றன வென்பது மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிசின் தீர்மானம்.

**அசல் கோர்ட்டுத் தீர்ப்பு:**—மேலே சொல்லப்பட்ட பிரதம காரணத்தை முன்னிட்டு ஜட்ஜி மிஸ்டர் வாலிஸ் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக வாதி ஐக்கோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டார்.

**லாயர்கள்:**—அப்பீல் வாதிக்காக வக்கீல் மிஸ்டர் டி. சீனிவாசய்யங்காரும் அப்பீல் பிரதிவாதிக்காக வக்கீல்கள் மிஸ்டர் எஸ். சடகோபாச்சாரியாரும் மிஸ்டர் சி. நரசிம்மாசாரியாரும் ஆஜரானார்கள்.

**வாதி தரப்பு லாயர் பேசினது:**—பிராமிசரி நோட்டுகளில் செய்யப்பட்டிருக்கும் மாறுதல் சாமானிய மாறுதல் என்றும் ஆதலால் அது நோட்டுகளின் சுபாவத்தை மாற்றிப்போடவில்லை என்றும் பிரிடிஷ் கோர்ட்டார்கள் மைசூரில் அனுஷ்டிக்கப்பட்டுவரும் ரெவினியூ சட்டங்களை கவனிக்கக் கட்டுபட்டவர்களல்லவென்றும் இந்த நோட்டுகளுக்கு ஸ்டாம்பு குறைவாக விருப்பதை முன்னிட்டு மைசூரில் செலாமணியாகாமற் போனபோதிலும் பிரிடிஷ் கோர்ட்டுகளில் செலாமணியாக மாட்டாதென்று சொல்லமுடியாதென்றும் ஆதலால் பிராமிசரி நோட்டுகளில் செய்யப்பட்டிருக்கும் திருத்தம் ஒரு பொருட்டாக எண்ணப்படும்படியான திருத்தமல்லவென்றும் சொன்னார்.

**பிரதிவாதியின் லாயர் பேசினது:**—சாதாரணமாக தாவா நோட்டுகள்பேரில் மைசூர் கோர்ட்டிலேயே வியாஜ்ஜியம் கொண்டுவரப்படலாம். மைசூர் ஸ்டாம்பு சட்டத்தின்படி போடப்படவேண்டிய ஸ்டாம்பு கட்டணத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டுமென்கிற நோக்கத்துடன் நோட்டுகள் திருத்தப்பட்டிருந்தால் அத்திருத்தம் சாமானிய திருத்தமாக எண்ணப்படக்கூடாது. ஸ்டாம்பு குறைவாகப் போடப்பட்டிருப்பதை முன்னிட்டு தாவாநோட்டுகள்பேரில் கொண்டுவரப்பட்ட வியாஜ்ஜியம் மைசூரில் செலாமணியாக மாட்டாதென்றால் பிரிடிஷ் கோர்ட்டுகளில்கூட செலாமணியாக மாட்டாது என்று சொன்னார்.

**ஐக்கோர்ட்டார் தீர்ப்பு:**—தாவா நோட்டுகளில் செய்யப்பட்டிருக்கும் சீர்திருத்தம் பொருட்டாக எண்ணப்படும்படியான சீர்திருத்தம். ஆகையால் அப்பீலைச் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்கின்றோம் என்று தீர்ப்புசொன்னார்கள். (27-8-1913)

ஜட்ஜிகள்:—சீப் ஜஸ்டிஸ்
மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட்

### அசல் தரப்பு அப்பீல்கள்.

**கேசின் விபரம் :**—மிஸ்டர N. P. சொக்கப்பா என்பவரும் மெஸர்ஸ் A. M. ரோஸ் அண்டு கோ என்பவர்களும் சென்னையில் சைக்கில் வியாபாரிகள்; இவர்கள் 1907 முதல் 1909 வரையில் பத்து வரவு செய்துவந்த வகையில் தங்கள் தங்களுக்கு மற்றொருவர் பாக்கி என்று ஒருவர்பேரில் ஒருவர் பிரியாது செய்துகொண

டார்கள். இந்த இரண்டு வியாஜ்ஜியங்களில் சம்பந்தப்பட்ட சரக்குகளின் விலைகளை நிர்ணயித்து அவரவர்கள் கொடுக்கவேண்டிய பாக்கி எவ்வளவு என்று தீர்மானித்து ஒரு ரிப்போர்ட் தாக்கல் செய்யும்படியாக இவ்விரண்டு வியாஜ்ஜியங்களும் ஒரு கமிஷனருடைய விசாரணைக்கு அனுப்பப்பட்டது. கமிஷனர் சாமான்களின் விலைகளை நிர்ணயித்து கணக்குகளையும் தீர்த்து ஒரு ரிப்போர்ட் அனுப்பினார். இந்த ரிப்போர்ட்டில் இருதரப்பாரும் அதிருப்தி அடைந்து ஒரு மத்தியஸ்தரை குறிப்பிட்டு அவர் தீர்மானத்திற்கு கட்டுப்படுவதாய் தீர்மானித்துக்கொண்டு கோர்ட்டில் மனுசெய்து கொண்டார்கள். கோர்ட்டாரும் அப்படியே உத்திரவு செய்து மத்தியஸ்தருடைய தீர்மானம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்படும்படியாக ஒரு வாயுதா காலம் குறிப்பிட்டார்கள்.

ஆனால் மத்தியஸ்தர் அந்த வாயுதா காலத்திற்குள் தீர்மானம் சொல்லவில்லை. வியாஜ்ஜியம் பைசல் செய்யப்படுவதற்காக மிஸ்டர் ஜஸ்டிஸ் வாலிசினுடைய விசாரணைக்கு வந்தது.

**அசல் தரப்பு கோர்ட்டார் தீர்ப்பு** :—கோர்ட்டார் கமிஷனருடைய ரிப்போர்ட்டை ஏற்றுக்கொண்டு ரூ. 665–10க்கு மெஸர்ஸ் எ. எம். ரோஸ் கம்பெனியாருக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

ஆகவே மிஸ்டர் N. P. சொக்கப்பா அப்பீல் செய்துகொண்டார்.

**லாயர்கள்** :—வக்கீல்கள் மெஸர்ஸ் வி. விஸ்வநாத சாஸ்திரியாரும், S. முத்தய்யா முதலியாரும் அப்பீல் வாதிக்காகவும், மெஸர்ஸ் C. P. ராமசாமி அய்யரும் மிஸ்டர் நானுபாய் தேவாஜ் அப்பீல் பிரதிவாதிகளுக்காகவும் ஆஜரானார்கள்.

**அப்பீல் வாதி லாயர்கள் சொன்ன கக்ஷி** :—வியாஜ்ஜியம் தீர்மானம் செய்யப்படுவதற்கு மத்தியஸ்தருக்கு அனுப்பப்பட்டிருந்ததால் வாய்தாகாலம் தவறிப் போய்விட்டபோதிலும் அந்த உத்திரவை ரத்து செய்யாமல் வியாஜ்ஜியத்தை பைசல் செய்வதற்கு கோர்ட்டாருக்கு அதிகாரமில்லை. (20 அல. 521, 11 அல, லா ஜர்ன. 98ல் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கும் கேஸ்களைப் பார்க்கவும்) அசல் தரப்பு கோர்ட்டார் கமிஷனர் ரிப்போர்ட்டை சாக்ஷியத்தின் ஒரு பாகமாக மட்டிலும் மதித்திருக்கவேண்டுமே யொழிய கேசில் ஏற்பட்டிருக்கும் மற்ற சாக்ஷியங்களை கேட்காமல் பைசல் செய்திருக்கக் கூடாது. அப்பீல் வாதி வாங்கிய சாமான்களுக்குப் போடப்பட்டிருக்கும் கிரயங்கள் கிரமமானதல்ல. மொத்தக் கிரைய விலைப்படி போடப்பட்டிருக்க வேண்டுமே யொழிய சில்லரை விலைப்படி போடப்பட்டிருக்கக் கூடாது.

**தீர்ப்பு** :—மத்தியஸ்தருக்கு வியாஜ்ஜியத்தை அனுப்பிய உத்திரவை கோர்ட்டார் சட்டப்படி ரத்து செய்யவேண்டிய தவசியமாகவிருந்த போதிலும் கோர்ட்டார் மத்தியஸ்தர் தீர்மானத்திற்கு இன்னும் வாய்தாகாலத்தைத் தள்ளி வைக்காமல் வியாஜ்ஜியத்தை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது முந்திய உத்திரவை ரத்து செய்ததற்குச் சமானம் என்றும் விலைகள் சம்பந்தப்பட்டவரையில் சில்லரை விலைகள் போடக்கூடாதென்றும் நியாயம் சொல்லி அசல் கோர்ட்டார் கொடுத்த டிக்கிரித் தொகையில் ரூ. 206-4-0 தள்ளி அப்பீல்பிரதிவாதிக்கு டிக்கிரி கொடுத்தார்கள்.

—:-:—

## INTEREST ON DECREED CLAIMS.
## டிக்கிரித் தொகைகளுக்கு வட்டி போடவேண்டும்.

பம்பாய் ஸ்மால்காஸ் கோர்ட்டுகளில் பம்பாய் ஐக்கோர்ட்டிலும், ஜில்லாக் கோர்ட்டுகளிலும் அனுஷ்டிக்கப்பட்டு வரும் வழக்கம்போலல்லாமல் ஸ்மால்காஸ் வியாஜ்ஜியங்களில் வியாஜ்ஜியம் தாக்கலான பிறகு தாவாத் தொகைகளுக்கு வட்டி போடப் படுகிறதில்லை என்றும் அப்படி போடப்படாததால் வர்த்தக வகுப்பார்கள் நஷ்டமடைந்து வருகிறார்கள் என்றும் மேலும் டிக்கிரி செய்யப்பட்டத் தொகையை வாய்தாவில் செலுத்தும்படி கோர்ட்டார் உத்திரவு செய்வதாலும் கனத்த அசௌகரியம் உண்டாகிறதென்றும் ஆதலால் இந்த இரண்டு கெடுதிகளை நீக்கி வைக்கவேண்டுமென்று (Indian Merchants Chamber and Bureau) இந்தியன் மெர்ச்சன்ட்ஸ் சேம்பர் அண்டு பீரோ என்கிற சங்கத்தார்கள் பம்பாய் ஐக்கோர்ட்டாருக்கு மிக வணக்கமாய் ஒரு மனு செய்து கொண்டிருக்கிறார்கள்.

:o:

## AN EMERALD CASE.
## ஒரு ரத்தனக் கேஸ்.

தேவரப்பள்ளி வெங்கட்ட நரசிம்மம் ரூ. 3 விலை மதிப்புள்ள ஒரு கண்ணாடிக் கல்லை விலை உயர்ந்த ரத்னம் என்று சொல்லி ரூ. 3500-க்கு சென்னப்பட்டணம் ரத்ன வியாபாரியாகிய மிஸ்டர் கோவர்த்தன தாசின் ஏஜண்டாகிய மிஸ்டர் ராமதாஸ்க்கு கிரையப்படுத்திமோசம் செய்ததாய் ராஜமகேந்திரபுரம் ஜாயின்ட் மாஜிஸ்டிரேட் மிஸ்டர் டி. சீதாராமய்யர் பந்துலுவால் 6 மாத கடின காவல் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான்.

## CRIMINAL SESSIONS.
## சென்னை ஐக்கோர்ட் கிரிமினல் செஷன்ஸ்.

சேஷன் ஜட்ஜி:—மிஸ்டர் ஜஸ்டிஸ் டையாட்ஜி

குற்ற வாளி:—நரசிம்மாச்சாரி

குற்றம்:—தபாலில் அனுப்பிய சாமானைத் திருடினது.

கேசின் விபரம்:—குற்றவாளி ரெயில்வே மெயில் செர்விசில சார்ட்டர் உத்தியோகத்திலிருந்தவன். சார்ஜண்ட் வார்ட் என்பவர் வெல்லிங்டன்னிலிருந்து கல்கத்தாவிலிருக்கும் இம்பீரியல் டொபாக்கோ கம்பெனிக்கு 8450 சிகரெட்டு கூப்பன்கள் அடங்கிய ஒரு பார்சல் அனுப்பினார். இந்த கூப்பன்களை சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு இம்பீரியல் டொபாக்கோ கம்பெனியார் இனும் அளித்து வருகிறார்கள். சென்ற பிப்ரவரிமீ 23உ குற்றவாளி பெஸ்வாடாவிலிருந்து திரும்பி வரும்போது சென்னை சென்டிரல ஸ்டேஷனில சோதனை செய்யப்பட்டான். 3 ஆயிரம் கூப்பன்கள் அவன் வசமிருந்தன. கல்கத்தாவில விசாரித்ததில இம்பீரியல் டொபாக்கோ கம்பெனியார் சார்ஜண்ட வார்ட் அனுப்பிய 8450 கூப்பன்களில் 5450 தான் வந்து சேர்ந்ததாய்த் தெரியவந்தது.

ஜூரர்கள்:—மெசார்ஸ் G. A. பிர்ஜர்பாட் (போர்மன்) R. B. காரிக W. A. வாக்கர் S. G. புருபோாட் T. K. துரைசாமி ஐயர் H. G. சான்ட்மான் V. R. சாமிநாத முதலியார் S. சங்கர ராவ் T. A. ராமச்சந்திரராவ்

### சாக்ஷி விசாரணை.

முதல் சாக்ஷிமிஸ்டர் பிராஜ்போஷன்லால். இவர் எம். டிவிஷன் மெயில செர்விஸ் சூப்பிரன்டு குற்றவாளி கைதி செய்யப்பட்ட காலையில் இவர்பேசின்பிரிட்ஜ் ஸ்டேஷனில் கல்கத்தாவிலிருந்து வரும் மெயில் வண்டியிலேறி சென்டிரல் ஸ்டேஷன் வரும் பரியந்தம் குற்ற

வாளியுடன் தபால் வண்டியில் பிரயாணம் செய்ததாகவும் சென்டிரல் ஸ்டேஷன் வந்தவுடன் குற்றவாளி கைதி செய்யப்பட்டான் என்றும் 3000ம் கூப்பன்கள் அவன் வசமிருந்தன வென்றும் இதன்பிறகு உடனே சி. ஐ டி. போலீஸ் இன்ஸ்பெக்டருடன் தாம் கல்கத்தாவிற்குப் போனதாகவும் சார்ஜன்ட் வார்டினல் அனுப்பப்பட்ட 8450 கூப்பன்களுக்கு 5450 கூபன்கள்தான் இம்பீரியல் டுபாக்கோ கம்பெனியாரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றுதாம் தெரிந்துகொண்டதாகவும் வாக்குமூலம் எழுதி வைத்தனர்.

இதன்பிறகு இம்பீரியல் டுபாக்கோ கம்பெனியின் ஏஜண்டுகளாகிய மெசர்ஸ் பாக்ஷிலே கம்பெனியின் பிரதிநிதி சாக்ஷியம் சொன்னார். இவர் சார்ஜன்ட் வார்டால் அனுப்பப்பட்ட பார்சலையும் கடிதத்தையும் பெற்று இம்பீரியல் டுபாக்கோ கம்பெனிக்கு அனுப்பியதாகவும் 3000ம் கூப்பன்கள் குறைந்திருப்பதாக கம்பெனியார் புகார்செய்தார்கள் என்றும் சொன்னார்.

சார்ஜன்ட் W. வார்ட் என்பவர் இம்பீரியல் டுபாக்கோ கம்பெனிக்கு 8450 கூபன்கள் அடங்கிய பார்சல் ஒன்று பாக் செய்யப்பட்டும் சீல் செய்யப்பட்டும் அனுப்பியதை ருஜுப்படுத்தினர்.

கீழ்க் கோர்ட்டில் குற்றவாளி எழுதி வைத்த வாக்குமூலம் ஜூரர்களுக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டது. குற்றவாளி பிரஸ்தாப மூவாயிரம் கூப்பன்களை தான் சேகரித்ததாகவும் பலரிடமிருந்து வாங்கினதாகவும் டிபன்ஸ் சொன்னான்.

கிரவுன் பிராசிக்யூட்டர் அட்டிரஸ் பேசிய பின்பு ஜட்ஜி ஜூரர்களுக்கு கேசின் சாரம்சத்தை எடுத்துச் சொன்னார்.

தீர்ப்பு:—குற்றவாளி திருட்டுக் குற்றத்தைச் செய்திருக்கிறான் என்று ஏகோபித்த அபிப்பிராயம் கூறியதை கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு குற்றவாளிக்கு ஒரு வருஷ கடின காவல் தண்டனை விதித்தார்கள். இதே மாதிரியான ஒரு குற்றத்திற்காக குற்றவாளி (27-8-1913) தண்டனை அடைந்து இப்போது ஜெயிலிலிருப்பதால் இந்த தண்டனை முடிந்த பின்பு பிரஸ்தாப கேஸ் தண்டனை ஆரம்பமாகுமென்று உத்திரவு செய்தார்கள்.

## Madras Small Cause Court.
## சென்னை ஸ்மால் காஸ் கோர்ட்டு.

:(‡):

ஜட்ஜி:—திவான் பகதூர் C. கிருஷ்ணன்.

வாதி:—சல்லா சுந்தரேசம் செட்டி.

பிரதிவாதி:—மதிராஸ அண்டு தென் மராட்டா ரெயில்வே டிராபிக் மானேஜர்.

கேசின்விபரம்:—வாதி புதுச்சேரியிலிருப்பவர். இவர் 1911 ஆகஸ்ட்மீ"த்தில் புதுச்சேரியிலிருந்தும் ஈரோடிலுமிருந்தும் சில சாமான்கள் பெங்களூருக்கு தம்முடைய பெயரில் அனுப்பி ரயில்வே ரசீதை வி. பி. தபாலில் ரிஜிஸ்டர் செய்து பெங்களூர் மெசர்ஸ் சார்ல்டன் கம்பெனிக்கு அனுப்பினர். பார்சலில் இவர் பெயரை எழுதுவதற்குப் பதிலாக மெசர்ஸ் சார்ல்டன் கம்பேனியார் பெயரை எழுதியிருந்தார். பார்சல் மேல்விலாசத்திலும், இது ரசீதைச் சேர்ந்த பார்சல் என்று எண்ணப்படுவதற்கு அடையாளமாக "V. P." என்கிற வார்த்தைகள் போடப்படவில்லை. ரயில் பார்சல்களை டெலிவர் செய்யும் கண்டிராக்டர் மேல்விலாஸப்படி மெசர்ஸ் சார்ட்லட்டன் கம்பெனியாரிடம் சாமான்களைக் கொடுத்துவிட்டு டெலிவரி புஸ்தகத்தில் கையெழுத்து வாங்கிவிட்டான். அதற்கு முந்தியே ரயில்வே ரசீதுகள் அடங்கிய ரிஜிஸ்டர் லெட்டர் மெஸர்ஸ் சார்ல்டன் கம்பெனியாரால் பெற்றுக்கொள்ளப் பட

மல் வாப்பீஸ் செய்யப்பட்டது. ஆகவே வாதி பார்சல் மதிப்பு கிரையம் ரூ. 700-யை ரயில் வே கம்பெனியாரிடமிருந்து பெறும் பொருட்டு சென்னப்பட்டனம் ஸ்மால்காஸ் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

லாயர்கள்.—வக்கீல் மிஸ்டர் S. குருசாமி செட்டி வாதி தரப்பிற்கும் ரயில்வே, தரப்பிற்கு வக்கீல்கள் மெசர்ஸ் மகாதேவ அய்யர், A. துரைசாமி அய்யர் ஆகிய இவர்கள் ஆஜரானார்கள்.

தீர்ப்பு.—ரயில்வே கம்பெனியார்கள் தரப்பில் அனேக ஆக்ஷேபங்கள் உண்டாயின. அவையாவன.—சாமான்கள் ரயில்வே ஆக்ட் 5-வது பிரிவின்படி ரிஜிஸ்டர் செய்யப்படவில்லை. பாத்தியதை நோட்டிஸ் 77-வது பிரிவின்படி ஏஜண்டிற்குக் கொடுக்கப்படவில்லை. சாமான்கள் எந்தத் தேதியில் டெலிவர் செய்யப்பட்டிருக்க வேண்டுமோ அந்தத் தேதியிலிருந்து ஒரு வருஷமான பிறகு இந்த வியாஜ்ஜியம் கொண்டுவரப்பட்டிருப்பதால் காலாவதி தோஷத்திற்குட்பட்டிருக்கிறது. லிமிட்டேஷன் ஆக்ட் 31 வது பிரிவின்படி வியாஜ்ஜியம் காலவதி தோஷத்திற்குள்ளாயிருக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்துவிட்டார்கள். (27—8—1913)

---

## INDIA BURMA TRADING Co.,
## இந்தியா பர்மா டிரேடிங் கம்பெனி

—(:*:)—

### போலிஸ் சோதனை,

இந்தியா பர்மா டிரேடிங் கம்பெனி என்கிற வியாபாரக் கம்பெனி 1912ல் ஸ்தாபிக்கப்பட்டது. 50லக்ஷ ரூபாய் பொருமானபங்குகள் இதற்கு மூலதனம் என்று சொல்லப்படுகிறது. மிஸ்டர் T. சின்னதம்பிமுதலியார் மாதம் ஒன்றுக்கு ரூ.500 சம்பளத்தில் செக்ரட்டிரியாகவும் மிஸ்டர் கிரே என்றபெயர்கொண்ட ஒருவரும் செக்ரேட்டரிக்கு உதவியாகவும் நியமிக்கப்பட்டார்கள். இக்கம்பெனியார் பெரும்பாலும் தானிய வியாபாரம் செய்துவந்தார்கள். கம்பெனிக்குத் தானியங்கள் வெளியூர்களில் வாங்கும் பொருட்டுபலவிடங்களில் சுமார் 20 ஏஜண்டுகளை சின்னதம்பி முதலியார் நியமித்ததாகச் சொல்லப்படுகிறது. ஒரு பங்கு ஒன்றுக்கு ரூ. 25 வீதம் ஒவ்வொரு ஏஜண்டும் 40 பங்குகள் எடுத்துக் கொண்டதாகவும் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு ஏஜண்டிற்கும் மாதம் ஒன்றுக்கு சம்பளம் ரூ. 50 கொடுப்பதாக ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் வெகுநாள் வரையில் சம்பளம் கொடுக்கப்படவில்லை. ஆகவே புகார்கள் கிளம்பின. இதன் காரணமாக ஏஜண்டுகளில் சிலர் போலீசுக்கு அறிவித்தார்கள். ஆதலால் போலீஸ் கமிஷனர் மிஸ்டர் P. ஹானிங்டன் உத்திரவின்பேரில் இன்டெலிஜென்ஸ் டிபார்ட்மென்டைச் சேர்ந்த போலீஸ் இன்ஸ்பக்ட்டர் ஞானப்பிரகாசம் பிள்ளை சென்ற ஆகஸ்ட்மீ 18உ திங்கட் கிழமை இக்கம்பெனியின் கட்டடத்தைச் சோதனை போட்டார். சிங்கன்ன நாயக்கன் தெருவிலிருக்கும் T. சின்னதம்பி முதலியாருடைய வீடும் சோதனை செய்யப்பட்டது. கம்பெனியினுடைய எல்லா புஸ்தகங்களும் சின்னதம்பி முதலியார் ரொக்கக் கையிருப்பு என்று சொல்லிக்கொடுத்த ரூ. 200 இப்போது போலீசார் வசமிருக்கிறது.

* * *

### செக்ரேட்டரி கைதி செய்யப்பட்டார்.

மேலே சொல்லப்பட்ட புஸ்தகங்களை போலீசார்கள் பரிசீலனை செய்தபின்பு சின்னத்தம்பி முதலியார் நிகழ் மாதம் 6.உ சனிக்கிழமை போலீஸ் கமிஷனருடைய வாரண்டின் பேரில் சி. ஐ. டி. சப் இன்ஸ்பக்ட்டர் மிஸ்டர் சீனிவாச பிள்ளையால் கைதி செய்யப்பட்டார். ஜாமீன்பேரில் வெளியே போகும்படி போலீஸ்

கமிஷனர் அனுமதி கொடுத்தும் ஜாமீன் கொடுக்க முடியாததால் பெனிட்டென்ஷரியிலிருக்கும் ரிமாண்டு ஜெயிலுக்கு அனுப்பப்பட்டார்.

* * *

## செக்ரேட்டரியின்மேல் கிரிமினல் கேஸ்.

### எழும்பூர், பிரசிடேன்சி மாஜிஸ்டிரேட் கோர்ட்.

(S. M. V. உஸ்மான் சாஹெப் கான் பகதூர்.)

**முதல் சார்ஜ்:**—குண்டூர் கிருஷ்னராவ் என்பவர் வடசர்க்காரில் இந்தியா பர்மா டிரேடிங் கம்பெனியின் ஜில்லா ஏஜண்டாக மாதம் ரூபா 100-சம்பளத்துடனும் அவசியமான அலவென்ஸ்களுடனும் நியமிக்கப படுவார் என்றும் அதற்காக ரூபா 4600 ஷை கிருஷ்ணராவ் டயமணிகட்ட வேண்டுமென்றும் இந்தத் தொகையை சின்னதம்பி முதலியார் பெற்று இந்தியன் பாங்கியில் பிக்சட் டிபாசிட்டில் கட்டிவைக்க வேண்டுமென்றும் ஷை ஜில்லா ஏஜண்டு உத்தியோககாலம் முடிந்தபின்பு தொகை மிஸ்டர் கிருஷ்ணராவிடம் கொடுத்துவிடப் படுமென்று அவருக்கு சின்னதம்பி முதலியார் புறட்டு சொல்லி ரூபா 4600 கிருஷ்ணராவ் கொடுக்கும்படியாகத் தூண்டியதில் இ. பி. கோ. 420-பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் "ஏமாற்றல்" என்னும் குற்றத்தை சின்னத்தம்பி முதலியார் செய்திருக்கிறார்.

**இரண்டாவது சார்ஜ்:**—ரூபாய் 50-சம்பளத்தில் கிட்டங்கி ஏஜண்டாய் நியமிக்கப்படுவதற்கு பங்கு ஒன்றுக்கு ரூ. 25-வீதம் 40-பங்குகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்றும் இந்தத்தொகை ஷை ஏஜண்டு உத்தியோகத்திற்கு ஜாமீனாகப் பாவிக்கப்படுமென்று அவ்வுத்தியோகத்தை விட்டு விலகினவுடன் ஷைத் தொகை வாப்பிஸ் செய்யப்படுமென்றும் குண்டூர் கிருஷ்ணராவுக்கு சின்னத்தம்பி முதலியார் மோசக்கருத்தான எண்ணத்துடன் சொல்லி அவர் 30-11-1912-ல் ரூ. 200 ம் 9-12-1912-ல் ரூ. 800-ம் ஆக ரூ. 1000-ம் கொடுக்கும்படியாக தூண்டியதில் இ. பி. கோ. 420 பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் குற்றத்தைச் செய்திருக்கிறார்.

**லாயர்கள்:**—பிராசிக்கியூஷன் தரப்பிற்கு இன்டலிஜன்ஸ் டிபார்ட்மெண்டு இன்ஸ்பெக்டர் மிஸ்டர் ஞானப்பிரகாசம் பிள்ளையுடன் போலிஸ் பிராசிக்கியூட்டிங் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் D. பத்மநாபநாயுடுவும், குற்றவாளி தரப்பிற்கு சொலிசிட்டர்கள் மெசர்ஸ் ஷார்ட் அண்டு பியூஸ் என்னும் கம்பெனியைச் சேர்ந்த மிஸ்டர் பியூஸ் உடன் ஐக்கோர்ட் வக்கில் மிஸ்டர் ஷாமராவும் ஆஜரானார்கள்.

**குற்றவாளியின் லாயர் பேசினது:**—கேசின் விசாரணை ஒத்திவைக்கப்பட வேண்டியதாயிருப்பதால் என்னுடைய கக்ஷிக்காரனை ஜாமீன் பேரில் விடலாம். அவர்பேரில் கொண்டுவரப்பட்டிருக்கும் சார்ஜுகள் நிற்கமாட்டா. ஏன் என்றால் கம்பெனியின் ஆர்ட்டிகில்ஸ் ஆப் அசோஸியேஷன்படி அவர் சம்பளம் வாங்கிக்கொண்டு வரும் செக்ரேட்டரி; ஐக்கோர்ட்டு வக்கில்கள் உள்பட கௌரவமுடையவர்களாகிய டைரக்டர்களால் கம்பெனி மானேஜ்மெண்டு செய்யப்பட்டுவருகிறது.

பிராசிக்கியூட்டிங் இன்ஸ்பெக்டர்கள் குற்றவாளி ஜாமீன்பேரில் விடப்படுவதை ஆக்ஷேபித்தார்கள்

**கோர்ட்டார் உத்திரவு:**—குற்றவாளி தனக்குத்தானே ரூ. 2000-மும் தலைக்கு ரூ. 1500-வீதம் வேறு இரண்டு ஜாமீன்களும் கொடுத்துவிட்டு வெளியே போகலாம் என்று கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள். (16-9-1913)

# INDUSTRY.
# கைத்தொழில்

## AN INTERESTING INSTALLATION AT HARIHAR.

## ஹரிகாரில் பம்ப்வைத்தது.

:(*):

துங்கபத்திரா நதிக்கரையிலிருக்கும் ஹரிகார் என்னுமிடத்தில மிஸ்டர் பீமப்பாபாண்டே என்பவருடைய முயற்சியால் ஒரு புதிய பம்பு அமைக்கப்பட்டது. மைசூர் திவானாகிய மிஸ்டர் விஸ்வேஸ்வரய்யா திறக்கும் தினக்கொண்டாட்டத்திற்குச் சபாநாயகரா யிருந்தனர். மிஸ்டர் பீமப்பா பாண்டே என்பவருடைய முயற்சியை தாமும் மைசூர் ஸ்ரீகவர்ன்மெண்டாரும் மிகவும் சிலாகிப்பதாகவும் இந்த பம்ப்பைக் கொண்டு 70-ஏக்ரா நிலத்திற்கு ஜலம் பாயும்படியாகச் செய்யலாமென்று சொன்னார். அந்த சமயத்தில் மைசூர் பொருளாதார விருத்தியைப பற்றியும் கைத்தொழில் விருத்தியைப் பற்றியும் சிறிது எடுத்துப் பேசினார். அடர்ந்த மேல்நாட்டுக் காட்டிலிருக்கும்படியான மரங்களைக்கொண்டு தேவையான நிலக்கரி தயார் செய்யலாமென்றும் சமஸதானத்திற்குள் ளிருக்கும் அருவிகளிலிருநது மின்சார வல்லமை (Power) உற்பத்திசெய்து கம்பிகள் மூலியமாகச்செல்லச்செயது பம்புகளை ஆடச்செய்து நிலங்களுக்கு ஜலம் பாயும்படியாகச் செய்யலாம் என்றுமசொன்னார். இம்மின்சார வல்லமையைக் கொண்டு விவசாய காரியங்களையும் ஜலம் இறைக்கும்படியும், மரங்களை வாள்கொண்டு அறுக்குமபடியும்; கருமபை நசுக்கும்படியும், நெல் குத்தும்படியும், பஞ்சைவிட்டு கொட்டையை எடுக்கும்படியும், எண்ணெய் எடுக்கும்படியும் செய்யலாம். மின்சார வல்லமையைக் கொண்டு நீங்கள் உங்கள் ஏர்க்களை உழும்படி செய்யலாம், ஜலத்தை உஷ்ணப் படுத்தலாம். சமையலும் செய்யலாம். நம்முடைய அழகான சமஸ்தானத்தில் அனேக அருவிகளிருக்கின்றன. அவைகளிலிருந்து மின்சார வல்லமை உற்பத்திசெய்து அனேகவிதங்களில் நம்முடைய ரயதுகள் நன்மை அடையும்படி செய்யலாம். இந்த சந்தர்ப்பத்தில் சித்தல்துருக்கம் ஜனங்களுக்கு நான் ஞாபகப்படுத்த வேண்டியது ஒன்றுளது. மாரிக்கனேவ் அணையிலிருந்து உற்பத்தி செய்யக்கூடிய மின்சார வல்லமை வீணாய்ப் போய்க்கொண்டிருக்கிறது. அதற்குப்பக்கத்திலுள்ள ஜனங்கள் இந்த வல்லமையைகொண்டு பயனடைய வேண்டுமென்றுவிரும்பினால்கவர்ன்மெண்டார் அதற்குத்தகுந்த ஏறபாடுகளைச்செய்யத் தயாராயிருக்கிறார்கள். பெரும்பாலும் நம்முடைய தடாக ஜலம் விவசாயப் பயிர்ச் செலவிற்கு உபயோகப்படுகிறது, பயிர் செலவான பின்பு தடாகங்கள்உலர்ந்தும் 4 மாதங்களுக்குக் குறையாமலும் 8—மாதங்களுக்கு மேற்போகாமலும் உலர்ந்து போகின்றன. தடாகத்தின் பூமிக்குள்ளிருக்கும்படியான ஜலத்தை கரும்பு சாகுபடிக்கும தோட்டப் பயிர் சாகுபடிக்கும் பிரயோகப் படுத்தலாம.

இதன் பிறகு ரயத்துகளுடைய கல்வி நிலைமையைப் பற்றியும ஐக்கிய முயற்சியைப் பற்றியும பேசி அடியிற கண்டபடி சொன்னார்.

ஜனங்களுக்கு முறபோக்கான நோக்கமில்லாததை முன்னிட்டு உண்டாகும் கனத்த நஷ்டங்களுக்கு நான உங்களுக்கு ஒரு உதாரணம் எடுதது்ச் சொல்லுகின்றேன. மைசூர் பட்டு கைத்தொழிலைப்பற்றி நான் சொல்லுகின்றேன். பட்டுப்பூச்சியின்கூடுகளுடைய சப்ளைகுறைந்து போய் வருகின்றன. ஏன் எனில் செத்துப்

போன முட்டைகள் குஞ்சு பொரிக்கும்படி விடப்படுகின்றன. சில மாதங்களுக்கு முந்தி ஒரு ஐரோப்பிய பிரயாணி என்னைவந்து பார்த்தார். பட்டுத் தொழிலின் தற்கால நிலைமையைக் குறித்து அவருடைய அபிப்பிராயத்தை அறிவிக்கும்படி நான் கேட்டேன். அவர் விசாரணை செய்தார். ரயத்துகளுக்கு நூதன விதங்கள் போதித்தாலொழிய விருத்தி உண்டாக மாட்டாதென்று சொன்னார். சுகாதாரக் கொள்கைகளை அனுசரிக்காததை முன்னிட்டு பூச்சிகள் பயிரை நாசம் செய்கின்றன. அதை அவர்கள் அறியாமல் "அதிர்ஷ்டமில்லை" என்றும் கடவுளுடைய சித்தம் என்றும், "தலைவிதி" என்றும் சொல்லிக்கொண்டு நஷ்டமடைந்து கொண்டு வருகிறார்கள் என்றும் எனக்கு எழுதியிருக்கிறார். பண்ணையில் மிகக் கவலையும் அறிவும் செலுத்தவேண்டுமென்றும் சுத்தமாக விருக்கும்படி செய்யவேண்டு மென்றும் ரயத்துகளுக்குத் தெரிகிறதில்லை. விதிப்பிரகாரம் நடக்குமென்று ரயத்துகள் எண்ணம் கொண்டிருப்பது அவர்களுடைய விருத்திக்கு முக்கியமான தேக்கமா யிருக்கிறது. ரயத்துகள் விசாரணை செய்யும்படியான குணுதிசயமும் சுருசுருப்பாக விருக்கும்படியான குணுதிசயமும்அவர்களுக்கு நாம் ஊட்டிக்கொண்டுவர நாம் முயல வேண்டும். கிருஷி நினைத்து விசாரணை செய்ய கற்றுக்கொண்டால், நூதன நோக்கங்களை அறிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி தன்னைத் திருத்திக் கொள்ளுவான் நிற்க.

பிரஸ்தாப நூதன ஏற்பாட்டை நாம் வருந்தி அழைக்கவேண்டும். அதுபுராதீன கால முதல் செய்துகொண்டு வந்த விவசாயத்தில் ஒரு புதிய மாறுதல்; சாஸ்திரம் என்ன என்ன செய்யக் கூடுமென்று நம்மவர்களில் ஐசுவரியமுள்ள கிருஷிகளுக்கு அறிவிக்கின்றது. மொத்தத்தில் பம்பின் சொந்தக் காரராகியமிஸ்டர் பீமப்பாவின் விடாமுயற்சியின் பயனுயிருக்கிறது. ஆகலால் அவரிடமும் அவருடைய புத்திரரிடமும் நாம் மனப்பூர்வமான சந்தோஷம் பாராட்டுகின்றோம். இப்பேர்ப்பட்ட முயற்சிகளில் பற்றுடைய மேன்மைதங்கிய மகாராஜா அவர்கள் மேற்படி இருவர்களுடைய முயற்சியும் வெற்றிபெற வேண்டுமென்றுதாம் ஆசீர்வதிப்பதாக அவர்களுக்குச் சொல்லும்படி எனக்கு உத்திரவு செய்திருக்கிறார். மிஸ்டர் பீமப்பாவைபோல் இன்னும் சிலர் முன்வந்து இம்மாதிரியான ஏற்பாடுகள் செய்வார்கள் என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

---

## INDUSTRIES IN BARODA.
## பரோடாவில் கைத்தொழில்கள்.

அடியிற்கண்ட விஷயங்கள் பரோடா சமஸ்தானத்தின் 1911-12 ம் வருஷத்திய பரிபாலன ரிப்போர்ட்டிலிருந்து எடுத்து பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன:—

பிரஸ்தாப வருடத்தில் ஒரு ஜாயிண்ட ஸ்டாக் கம்பேனி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. நொசாரி ஜில்லா விவசாயிகள் சேர்ந்து ரூ 50 ஆயிரம் மூலதனத்துடன் ஒரு ஐக்கிய பஞ்சுக் கொட்டை எடுக்கும்தொழிற்சாலை ஸ்தாபித்திருக்கிறார்கள். ஒரு பஞ்சுபிரசும், மெழுகுவத்தி தொழிற் சாலையும் பொது ஜனங்களால் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. பரோடா பில்கான் தொழிற்சாலை நல்லவேலை செய்து கொண்டு வருகிறது. லாபம் எதிர்பார்க்கப்படுகிறது. பால்மோராவில் கட்டப்பட்டு வரும் Stearine and Glyceraine (..................) தொழிற்சாலை கட்டட வேலைகள் அனேகமாக முடிவடைந்து வருகின்றன. இது மாதிரியாக இந்தியாவில் வேறு எவ்விடத்திலு மில்லை. யந்திரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. பரிக்ஷார்த்தமாக சில வேலைகளும் நடத்தப்பட்டு மெழுகு வத்திகளும் செய்யப்பட்டு வருகின்றன. அம் மெழுகு வத்திகள் ஜனங்களுடைய மனதைப்பற்றி யிருக்கின்றன. சில வருடங்களுக்கு முந்தி ஏற்படுத்தப்பட்ட சயாஜிமெட்டல் வொர்க்ஸ்கம்பெனி இப்போது வே

லைசெய்ய ஆரம்பித்து விட்டது. பித்தளைப்பாத்திர வேலைகள் நடந்து வருகின்றன. பெண்ட்லாண்ட் சித்தாப்பூர் எண்ணை ஆலைகளும் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன. கொட்டை தொழிற்சாலை சென்ற வருடம் தீப்பிடித்து எறிந்து போய்விட்டது. மறுபடியும் புதுப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பரோடா பாங்க் மிகவும் ஒழுங்காய் நடை பெற்று வருகின்றது. அதில் அனேகர்கள் பணம் போட்டிருக்கிறார்கள். பெரும்பாலும் அனேகமான கைத்தொழிற்களுக்கு மூலதனம் கொடுத்து உதவி யிருக்கின்றது.

---

## POWER-LOOM AND HAND-LOOM.

## இயந்திரத் தரியும் கைத்தரியும்.

---

“மிஷின் தரியும் கைத்தரியும்” என்று தலைப் பெயர் பூண்ட ஒரு வியாசம் கல்கத்தாவில் பிரசுரமாகிவரும் “காமர்ஸ்” என்கிற பத்திரிகையில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. அதில் அடியிற்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது:— தென் மாகாணத்தி லிருக்கும் நெசவுக்காரன் ஏழை; நூதன தரியை ரூ 25 முதல் ரூ 40–வரையில் கொடுத்து வாங்க இயலபற்றவன். உண்மையில், உற்சாகத்துடன் முயற்சி செய்கிறவர்களுடையவும் கவர்ன்மெண்டு கைத்தொழில் இலாக்காவைச்சேர்ந்த ஆவேசம் கொண்ட நிபுணர்களுடைய பிரயத்தனங்களும் நிறைவேறாமல் போவதற்கு இதுதான் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆனால் அந்த பூமியில் ஒரு தீர்க்க தரிசி கிளம்பி யிருக்கிறார். அவர் அமரிக்கையாயும் ஆடம்பர மின்றியும் எப்படி அதிகப்படியான சரக்குகள் தயார் செய்யலாமென்று நெசவுக்காரர்களுக்குப் போதித்துக் கொண்டு வருகிறார். மிஸ்டர் தியாகராய செட்டியார் முனிசிபல் கவுன்சிலர்; சட்ட சபையிலும் மெம்பராயிருக்கிறார். அவர் நெசவுக்காரஜாதியைச் சேர்ந்தவர். அவர் வெற்றி அடைந்து வருவதற்கு அதுதான் பிரதம காரணம். சென்னை ஓரத்திலிருக்கும் தண்டையார் பேட்டையி லுள்ள அவருடைய தொழிற்ச் சாலையில 60 அல்லது 90-பறக்கும் நூனாழித்தரிகள் (flyshuttle looms) வேலை செய்கின்றன. அனேக நெசவுக்காரர்கள் இந்த தொழிற் சாலையைநாடி வந்து 4 அல்லது 5-மாதகாலம் அவருடனிருந்துவேலைகற்றுக்கொண்டு அச்சாலையிலேயே இரண்டொரு தரிகிரயம் பெற்றுக் கொண்டு கிராமங்களுக்குத் திரும்பிப் போகிறார்கள். இது முழுதிலும் லோகோபகார நோக்கம் கொண்ட தொழிற்சாலையல்ல. லாபத்தைநோக்கிவேலைசெய்யும்சாலை. தம்சாலைசரக்குகளுக்கு இருக்கும் கிராக்கிக்குத்தகுந்தபடி தம்மால் சரக்கு தாயார்செய்து சப்ளை செய்யமுடியவில்லைஎன்று மிஸடர்செட்டியார் சொல்லுகிறார். அவருடைய வெற்றியின் ரகசியம் என்ன வென்றால் சுதேச நெசவுக்காரனே அறிந்துகொள்ளுகிறார். அவருடைய தொழிற சாலைகளில் பிரயோகப்படுத்தப்பட்டு வரும் தரியின் அமைப்பு சாமானியமான தாயிருக்கிறது. அவசியமாகவிருக்கும் போது கிராமத்தச்சனே ரிப்பேர் செய்து விடலாம். மகா ஏழையான நெசவுகாரன் கூட ரிப்பேர் செய்யும் படியான அவ்வளவு சொற்பச் செலவில் ரிப்பேர் செய்து விடலாம். இந்தப் படத்திறகு ஒரு இருளடர்ந்தபக்கமு மிருக்கிறது! இந்தபலமான கைதொழிலை புதிப்பிப்பதற்கு ஒவ்வொருவரும் சரியானபடி எவ்வளவு பாடுபடலாம் என்று மிஸடர் செட்டியார் எடுத்துக் காண்பிக்கிறார் என்பதில் சந்தேகமில்லையாயினும், புதிப்பிக்கப்படுவது தொழிலே யொழிய தொழிலின் வேலைப்பாடல்ல. நெசவுக்காரர்கள் அதிகப்படியான சரக்குகளைத் தயார் செய்யும் பொருட்டு நூதன விதங்களை அனுஷ்டித்து நெய்வதில் தங்களுடைய முன்னோர்கள் நன்கறிந்த பழைய சித்திர வேலைப்பாட்டை சகஜமாக மறந்து போவார்கள். பழைய அழகான வேலைப்பாடுகள்எல்லாம் போய் இங்கிலாண்டில் நெய்துவரப்படும் குருட்டு விதமான நெசவுவேலைப் பாடுகளைப்போல செய்துவரப்படுகின்றன. அது அப்படி யிருக்கவேண்டியதாகவிருப்பதைத்தவிர வேறேவிதமாக விருக்க முடியாது. அதுகிழக்குதேசம் அடைந்துகொண்டிருக்கும் மாறுதல்களில் ஒன்று; ஒழுங்கானபார்வையின கீழ் நெசவு கைத்தொழில விசேஷமாக விருத்தி அடையும். இனிமேல் இத்தொழில் பலப்படுவதற்கு கவர்ன்மெண்டாருடைய உதவியை எதிர் பார்க்கக் கூடாது. நாமே முயற்சி செய்து பலப்படுத்திக் கொண்டு வரவேண்டும்.

---

# CO-OPERATION AND AGRICULTURE.
# ஐக்கிய முயற்சியும் விவசாயமும்.

## MADRAS CITY CO-OPERATIVE BANK.
## சென்னை நகர் கோவாபரேட்டிவ் பாங்க்.

சென்னை நகர் கோவாப்பரேட்டிவ் பாங்கின் வருஷபூர்த்தி ஜெனரல் மீட்டிங்கு சென்ற மாதம் கூடினது. சேர்மன் மிஸ்டர் T. ரெங்காச்சாரியார் டைரக்டர்களுடைய ரிப்போர்ட்டை ஆஜர் படுத்தினார். அடியிற் வரையப்பட்டிருக்கும் சமாசாரங்கள் அந்த ரிப்போர்ட்டிலிருந்து எடுத்து எழுதி யிருக்கின்றோம்:—

பிரஸ்தாப ரிப்போர்ட் வருடத்தில் ரூ. 50740 மூலதனம் கொடுத்த 653 பேர்கள் மெம்பர்களாகச் சேர்ந்தார்கள். அவர்களில் ரூ. 9920 கொடுத்த 186 பேர்களுடைய கணக்கு 4-வது பைலாவின்படி முடிவடைந்தது. அவர்களுக்குச் சேரவேண்டிய ரூ. 2726 பட்வா செய்யப்படுவதற்காக வசக்கட்டுக்கணக்கில் வைக்கப்பட்டிருக்கிறது. இந்த பாங்கி, என்ன நோக்கங்களுடன் ஏற்படுத்தப்பட்டதோ அந்த நோக்கங்கள் பலிதப்படுகின்றன என்று டைரக்டர்கள் சந்தோஷப்படுகிறார்கள். கவர்ன் மெண்டு உத்தியோகத்தில் இல்லாதவர்களுக்கும் பென்ஷன் அல்லது உபகாரப் பணம் ஆதாரமாக உடைத்திராதவர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் இந்த பாங்க் மிகவும் உபயோகமுள்ளதாயிருக்கிறது. 1913 ஜனவரி 30௨ வரையில் பாங்கியின் ரிஜிஸ்டரில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் 458 மெம்பர்கள் 40,190 ரூபாய்க்கு பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவற்றில் ரூ. 36,655, 1913 ஜூன் 30௨ வரையில் செலுத்தி யிருக்கிறார்கள். பாக்கி ரூ. 3535 இனி வசூல் செய்யப்படவேண்டும். மெம்பர்கள் பாங்கியில் போட்ட பலவிதமான டிபாசிட்டுகளால் 1913 ஜூன் மாதம் 30௨ வரையில் ரூ. 23,255-ம் மெம்பர்களல்லாதவர்களால் ரூ. 30756-ம் ஆக மொத்தம் ரூபா. 54,011 சேர்ந்தது. ரிப்போர்ட் வருஷத்தில் மெம்பர்களுக்குக் கொடுத்த கடனின் எண்ணிக்கை 151; வாங்கின கடனைத் திருப்பிக் கொடுப்பதற்கு 6 மாதம் முதல் 24 மாதம் வரையில் வாயிதா காலம் கொடுக்கப்பட்டு வருகிறது- ரிப்போர்ட் வருஷத்திற்கு ரூ. 2762-15-8 லாப வருமானம். இந்தத் தொகையில் 4-ல் ஒரு பாகம் அதாவது ரூ. 691 பிரத்தியேக நிதியில் வைக்கப்படும். பாதி அதாவது ரூ. 1381, 1913 ஜூன் 30௨ யில் மெம்பர்களாக விருந்தவர்களுக்குள் லாபமாக பட்வாடா செய்யப்படும். அரைக்கால் பாகம் அதாவது ரூ. 345 சிப்பந்திகளுக்கு இனாம் பட்டுவாடா செய்யப்படும் பொருட்டு டைரக்டர் வசம் வைக்கப்படும். பாக்கி ரூ. 345-15-8 அடுத்த வருட கணக்கிற்கு கொண்டுவரப்படும்.

## CO-OPERATIVE SOCIETIES.
## ஐக்கிய முயற்சி சங்கங்கள்.

(:o:)

இப்போது நாடெங்கும்ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஐக்கிய முயற்சி சங்கங்களால் ஜனங்கள் இலகுவான வட்டிக்குத் தேவையான பணங்களை வாங்கி தங்களுடைய முடைகளைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள் அல்லது ஏற்கெனவேயுள்ள கடன்களைத் தீர்த்துக் கொள்ளுகிறார்கள். அல்லது தொழிலைச் செய்கிறார்கள். இம்முயற்சியால் நாட்டிற்கு நன்மை உண்டாகிறதென்

றும் ஜனங்கள் கூடியமட்டில் சிரமமின்றி காலம் கழித்து வருகிறார்கள் என்று அனுபோகம் அறிவிக்கிறது. விவசாயத்திலும் இம்முயற்சியைப் பிரயோகப்படுத்தி விவசாயம் தழைத்தோங்க வேண்டுமென்றும் இதை முன்னிட்டு கிராமங்கள் தோறும் கூட்டுமுயற்சியைப் பிரயோகப்படுத்தி விவசாயம் தழைத்தோங்க வேண்டுமென்றும் கவர்ன்மெண்டாரும் பிரமுகர்களும் எண்ணங்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் சென்னையிலிருக்கும் சென்டிரல் விவசாயக் கமிட்டியின் காரியதரிசிகளாகிய மெஸர்ஸ் திவான் பகதூர் எம். ஆதிநாராயண அய்யா அவர்களும் மிஸ்டர் என். பட்டாபி ராமராவ் அவர்களும் தென் ஆற்காடு மதுரை திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களுக்குச் சென்று ஜனங்களைக் கூட்டம்கூட்டி ஐக்கிய முயற்சியை ஆதாரமாகக்கொண்ட கிராம கோவாப்ரேட்டிவ் விவசாய சங்கங்கள் ஸ்தாபிக்கும்படியாக போதித்துக்கொண்டு வருகிறார்கள். இவ்விருவர்களுடன்கூட மேலே சொல்லப்பட்ட மூன்று ஜில்லாக்களுக்கும் கோவாப்ரேடிவ் ரிஜிஸ்டிராராகிய திவான் பகதூர் எல். டி. சாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களும் போயிருந்தனர். மேலே சொல்லப்பட்ட மூன்று ஜில்லாக்களின் பிரதான நகர்களாகிய கூடலூர் மஞ்சக்குப்பம் திருநெல்வேலியில் சென்ற ஆகஸ்ட்டு மாதம் முறையே 2, 6, 13-ஙு களில் மீட்டிங்குகள் நடத்தினார்கள். மஞ்சக்குப்பம் மீட்டிங்கு ஜில்லா கலெக்ட்டர் ஆபீசில் நடத்தப்பட்டது. ஜில்லா கலெக்ட்டர் மிஸ்டர் அஜிசுடின் சாகிப் சேர்மேனா யிருந்தனர். மதுரையில் மீனாக்ஷி வித்தியாசாலையில் மீட்டிங் நடத்தப்பட்டது. திருநெல்வேலியில் கூடிய மீட்டிங்கிற்கு ராவ்பகதூர் சுந்தர சாஸ்திரியார் சேர்மேனாக யிருந்தனர். ஒவ்வொரு மீட்டிங்கிற்கும் வெகு ஜனங்கள் வந்திருந்தார்கள். இம்மூன்று மீட்டிங்குகளின் நடவடிக்கைகளை முழுதிலும் நாம் எடுத்த எழுத அவாக்கொண்டிருந்தபோதிலும் "சென்னை வியாபாரி" இச்சமயம் இடம்கொடுக்க மாட்டாதென்று விசனிக்கிறோம். ஆதலால் மதுரை மீட்டிங்கின் நடவடிக்கைகளை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்து எழுதி நிறுத்துவோம்.

* * *

### மதுரை மீட்டிங்கில் திவான்பகதூர் ஆதிநாராயணய்யா பேசியது.

கோவாப்பரேட்டிவ் சங்கங்களில் கடன்வாங்கும் விஷயம் உங்களுக்குத் தெரியாததல்ல. எல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். மதுரை ராமநாதபுரம் கிராமாந்திரங்களில் ஐக்கிய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டதின் கருத்தென்னவென்றால் கிருஷிகளுக்குத் தேவையான பணம் அற்ப வட்டிக்கு உடனேகிடைக்கும்படியாகச் செய்யவேண்டு மென்பதே. ஐக்கிய முயற்சியின் நோக்கம் அத்துடன் முடிந்துபோய்விட்டதென்று நீங்கள் அவ்விடத்திலேயே நிற்கிறீர்கள். ஆனால் விவசாய ஜனங்களின் நிலைமையை விருத்திபடுத்த வேண்டுமானால் நீங்கள் அவ்விடத்திலேயே நிற்கக்கூடாது. ஆனால் இன்னும் மேலே போகவேண்டும். சென்னை கவர்ன்மெண்டின் விவசாய இலாகாக்காரர்கள் சில நூதன விஷயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சில அனுபோகங்களையும் அடைந்திருக்கிறார்கள். கிருஷிகன் அவைகளை அனுஷ்டித்து வந்தால் மட்டிலும் அவர்களுக்கு நன்மையாயிருக்கும். ஆதலால் ஐக்கிய முயற்சியின் நோக்கத்தின் விசாலம் அவர்களுக்கு அவசியம் அறிவிக்கப்பட வேண்டும். ஆதலால் அதற்காக வேண்டிய வேலைகளைச் செய்ய இப்போது ஆரம்பித்திருக்கிறோம். எப்படி அந்த வேலையைச் செய்து முடிக்கலாமென்று வெகுநாளாக யோஜனை செய்துவந்தோம். சென்னையில் வேலை செய்யும்படியான சென்டிரல் விவசாயக் கமிட்டி ஒன்று நமக்கிருக்கிறது. சில விடங்களில் ஜில்லா விவசாய சங்கங்களிருக்

கின்றன. இவ்விராஜதானியின் சில பாகங்களில் தாலூக்கா விவசாய சங்கங்களிருக்கின்றன.

இச்சங்கங்களின் நோக்கம் என்னவென்றால் புதியவும் அல்லது விருத்திபடுத்தப்பட்ட விதங்களை அனுஷ்டித்து சாகுபடி செய்வதை விஸ்தீரணப்படுத்தி வர வேண்டு மென்பதே! இந்த சங்கங்களுடைய நிலைமை கேவலமாயிருந்துகொண் டிருக்கின்றன. ஏனென்றால் மெம்பர்கள் இஷ்டப்பட்டு கொடுத்தசந்தாப் பணத்தைக்கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. ஆதலால் அவைகளின் நிலைமைநிச்சயம் என்று எண்ணக்கூடியதாயில்லை. விவசாயத்தை விருத்திப்படுத்த இதுவரையில் அங்குமிங்கும் அத்தி பூத்ததுபோல விருக்கும் சில விவசாய உற்சாகக் காரர்களுடைய எத்தனங்களை நம்பிக் கொண்டிருந்தோம். ஒரு ஜில்லாக் கலெக்டர் விவசாயத்தில் பற்றுடையவராயிருந்தால் அந்த ஜில்லாவில் இருக்கும் விவசாய சங்கத்தின் வேலை திருப்திகரமாக நடந்து வருகிறது; அந்தக் கலெக்டர் வேறொரு ஜில்லாவிற்கு மாற்றப்பட்ட அந்த நிமிஷமே விவசாயசங்கமும் உரங்க ஆரம்பித்து விடும். இந்தச் சங்கங்களுக்குக் கவர்ன்மெண்டார் என்ன உதவி செய்தும் அவைகள் யாதொரு உபயோகமான வேலையையும் செய்ய முடியவில்லை என்றும், ஆதலால் அச்சங்கங்களை எடுத்துப் போடுவது நலமாயிருக்குமென்று மிஸ்டர் கவுச்மான் சிலதினங்களுக்கு முந்தித்தான் சொன்னார். நூதன விதங்களை அனுஷ்டித்து சாகுபடி செய்வதை இந்த இராஜதானியில் விருத்தி செய்யவில்லை என்று சென்னையி லிருக்கும் சென்டிரல் விவசாயக் கமிட்டியரார் பலமாக நிந்திக்கப்படுகிறார்கள். கண்டுபிடிக்கப்பட்ட நூதன முறைகளைப் பரவச் செய்யவேண்டிய பொறுப்பும் விவசாயிகள் அனுஷ்டிக்க வேண்டிய வேலையும் இச்சங்கங்களுடைய கடமையாக இருக்கவேண்டுமென்று கவர்ன்மெண்டு விவசாய இலாக்காக்காரர்கள் நினைத்தார்கள். ஆனால் சங்கங்கள் அக்கடமைகளைச் செய்து முடிக்கவில்லை. ஐக்கிய நாணய சங்கங்கள் இந்த ராஜதானியின் கிருஷிகருக்கு எவ்வளவு நன்மையைக்கொடுத்து வருகிறதென்று நீங்கள் எல்லோரும் அறிந்து கொண்டிருக்கிறீர்கள். இச்சங்கங்கள் கிருஷிகருக்குத் தேவையானபோது உபாய வட்டிக்குப் பணம் சில நிபந்தனைகள்பேரில் கொடுத்து உதவிவருகின்றது. அதேமாதிரியாக விவசாயிகள் நூதன விதங்களை அனுஷ்டித்து சாகுபடி செய்ய வசதிகள் செய்யப்பட்டால், அவர்களுக்கு நன்மையை பயக்குமென்பது நிச்சயம். ஐக்கிய முயற்சியை ஆதாரமாகக்கொண்ட விவசாய சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டால் தகுந்த மார்க்கத்தில் நல்ல வேலை நடக்குமென்று எண்ணப்படுகின்றது. விவசாய இலாக்காக்காரர்கள் கண்டுபிடித்திருக்கும் நூதன விதங்களைக் அனுஷ்டித்து சாகுபடி செய்வதைப் பரவச்செய்ய வேண்டுமென்கிற முக்கிய நோக்கத்துடன் சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். எப்படி இந்த எண்ணம் நிறைவேறுமென்பது அடுத்த பிரஸ்னை. இதற்கென்று பிரத்தியேக சங்கங்கள் ஏற்படுத்த வேண்டியதில்லை என்றும், ஐக்கிய நாணய சங்கங்களே இந்த வேலையைச் செய்து வரக்கூடும் என்றும் நாங்கள் நினைக்கிறோம். விவசாயத்தைப்பற்றி ஐக்கிய நாணய சங்கங்கள் கவனித்துவரக் கூடாதென்று நீங்கள் அபிப்பிராயப்பட்டால் ஐக்கிய நாணய சங்கங்களிருக்கும்படியான விவசாயப் பற்றுடையவர்கள் ஒன்று சேர்ந்து அச்சங்கத்தினுள்ளே ஒரு கமிட்டியாக ஏற்படுத்திக்கொண்டு ஐக்கிய ஆதாரத்துடன் விவசாயத்தை விருத்திபடுத்திக்கொண்டு வரலாம். நல்ல விதை, நல்ல எரு, விருத்திபடுத்தப்பட்ட ஆயுதங்கள் முதலியவைகளை மெம்பர்களுக்கு சப்ளை செய்து வருவதை இந்த கமிட்டியார் கவனித்துக்கொண்டு வரலாம். மெம்பர்களுடைய மாசூலுக்கு நல்ல கிராக்கியும் சம்பாதித்துக் கொடுக்கலாம்.

---